விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 289 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 18 சனிக்கிழமை (04.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உள்நாடு, வெளிநாடுகளுக்கான
தபால்கள், பொதிகள் சேவை
16 kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
UK - 1250/=
Australia - 2050/=
France - 1930/=
Canada - 2470/=
Germany - 1930/=
தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. 0777 554 528
கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார்,முல்லைத்தீவு, மல்லாவி
(5585)

# இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கட்டாயம்

## வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்
## ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா



(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கட்டாயம் வழங்கப்படும். கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேற்றப்படும் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவில்

## இளைஞன் மீது வாள்வெட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இளைஞன் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் முல்லைத்தீவு 15ஆம் பக்கம் பார்க்க

## இயக்கச்சியில் குண்டுகள்



15ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் பொலிஸ் தடுப்பில் சந்தேக நபர் மரணம்
### பொலிஸார் அடித்துக் கொன்றதாக தாய் குற்றச்சாட்டு

(மன்னார்)

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பேசாலைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 34 வயதுடைய நபர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை பொலிஸ் 15ஆம் பக்கம் பார்க்க

## நாட்டை அழிவுக்குக் கொண்டு செல்லும் பாதாள ஆட்சியை முறியடிப்போம்
### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(கண்டி)

நாட்டை அழிவுக்குக் கொண்டு செல்லும் பாதாள ஆட்சியை முறியடிப்போம் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று, எமது நாட்டில் அரசியலமைப்பால் 15ஆம் பக்கம் பார்க்க

## ரணில், நாமல் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் ஒன்றுகூடல்
### கொழும்பு அரசியலில் பரபரப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் உள்ள தனியார் விருந்தகத்தில் நேற்று முன்தினம் இரவு எதிர்க்கட்சி அரசியல் கட்சித் தலைவர்களின் சந்திப்பும் விருந்துபசாரமும் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

15ஆம் பக்கம் பார்க்க

## கலாநிதி ஆறு.திருமுருகனுடன் கஜேந்திரகுமார் எம்.பி சந்திப்பு



15ஆம் பக்கம் பார்க்க

குருதிக்காடு பாடலுக்காக

## புலனாய்வுத் துறையினர் கானா குமரனிடம் விசாரணை

(கிளிநொச்சி)

"குருதிக்காடு" எனும் பாடல் படைப்புத் தொடர்பில் அப்பாடலைப் பாடிய கானா குமரனின் (கிருஷ்ணகுமார் தனுசன்) கிளிநொச்சி அம்பாள் குளத்தில் உள்ள அவரது வீட்டிற்கு நேற்றைய தினம் (03.10.2025) சென்ற அரச புலனாய்வுப் பிரிவினர் அவரை விசாரணை செய்துள்ளனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது,

2025ஆம் ஆண்டின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் 15ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபை தேர்தல் நடத்த
### புதிய எல்லை நிர்ணயம் அவசியம்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் வேண்டுமானால்புதிய எல்லை நிர்ணயம் அவசியம் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

02ஆம் பக்கம் பார்க்க

கிளிநொச்சியில்

## தீயில் எரிந்த நிலையில் ஆசிரியர் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தில் பணியாற்றும் ஆசிரியர் ஒருவர் கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் அமைந்துள்ள கொத்தணி ஆசிரியர் விடுதியில் இருந்து தீயில் எரிந்த நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேரம்பலம் பரந்தாமன் (வயது-48) என்பவரே சடலமாக 02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலை போராட்டத்திற்கு பின்னால் அரசியல்வாதிகள்

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்

மன்னார் காற்றாலைக்கு எதிரான போராட்டத்திற்கு பின்னால் அரசியல்வாதிகள் உள்ளதாக கடற் றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் - சங்கானையில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் காற்றாலை அமைப்பதற்கு திறப்புவிழா நடாத்தியவர்கள், காற்றாலைகளுக்குப் பின்னால் ஓடியவர்கள், அந்தக் காற்றாலை கம்பனிகளுகளிடம் கொடுக்கல் - வாங்கல் மேற்கொண்டவர்கள் முன்னைய அரசியல்வாதிகள். அந்தக் காவாலித்தனமான அரசியல்வாதிகளே இந்தப் போராட்டத்தின் பின்னால் இருக்கின்றனர்.

நாங்கள் கூறுவது யாதெனில், இது மக்களது பிரச்சினையாக இருக்குமாக இருந்தால், இது மன்னாருடைய பிரச்சினையாக இருக்குமாக இருந்தால், இந்த பிரச்சினையால் மன்னார் மூழ்குமாக இருந்தால் அது பற்றி வேதனை அடைபவர்கள், அதனைத் தடுத்து நிறுத்துபவர்கள் வேறு யாருமல்ல நாங்கள் தான்.

அதனால் இந்தக் காற்றாலை சம்பந்தமான பிரச்சினைக்கு உரிய மக்களுடன் பேசி கூடிய விரைவில் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்போம் என்றார். (ம-7)


அராலி மேற்கு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய பரிபாலன சபை

அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பின் முடிவுகள்

| பரிசுகள் | சிட்டை இல | பெயர் | விலாசம் |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4440 | க.அகிலேசன் | அச்சுவேலி இடைக்காடு |
| 2ம் பரிசு | 2241 | | |
| 3ம் பரிசு | 3521 | இ.இந்திரதேவன் | கோப்பாய் மத்தி, கோப்பாய் |
| ஆறுதல் பரிசு | 4423 | S.Jchiyci Brion | புங்குடுதீவு |
| ஆறுதல் பரிசு | 4076 | நா.கிருஷ்ணகுமார் | அராலி மேற்கு |
| ஆறுதல் பரிசு | 2541 | கதிர் | அராலி மேற்கு |
| ஆறுதல் பரிசு | 446 | M.பிறேமிளா | அராலி மேற்கு |
| ஆறுதல் பரிசு | 6952 | கோயில் | அராலி மேற்கு ஸ்ரீ பேச்சி அம்மன் |
| ஆறுதல் பரிசு | 3119 | விமல் | நீர்வேலி |
| ஆறுதல் பரிசு | 2345 | A.Sangeetha | பருத்தித்துறை |

வீ.சிவகுமார் தலைவர்

மேற்படி பரிசில்கள் பெறுவோர் இன்றைய நாளில் இருந்து 10 நாட்களுக்குள் சிட்டையைக் காண்பித்து உறுதிப்படுத்தி பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

பா.தனுஜன் செயலாளர்

(5579)


### மாகாண...

புதிய எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டால், அதற்கு சுமார் ஒரு வருட காலம் தேவைப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2015 முதல் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தத்தின் விளைவாக சட்ட சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இதன்னால் மாகாணசபைத் தேர்தல் பல ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமானால், தற்போதுள்ள சட்ட அமைப்பின் கீழ், ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள எல்லை நிர்ணய அறிக்கைக்கு அமைய தேர்தலை நடத்த முடியுமா என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இல்லையெனில், புதிய எல்லை நிர்ணயம் தேவைப்படும், அல்லது முன்னைய முறையின்படி தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

### இனப்...

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் எனத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் உறுதியளித்தோம். அந்த உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். எல்லை நிர்ணயம் தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அந்தப் பிரச்சினையைத் தீர்த்துத் தேர்தலை நடத்த வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு மாகாணசபை முறைமை தீர்வு அல்ல என்ற போதிலும் தற்போது அந்த முறைமை இருப்பதால் அதில் கைவைக்கப்படாது எனவும், புதிய அரசமைப்பு ஊடாக தற்போது இருப்பதைவிட சிறப்பான தீர்வு வழங்கப்படும் எனவும் நாம் உறுதியளித்துள்ளோம். இந்த உறுதிமொழியும் நிறைவேற்றப்படும் என்றார். (ம-7)

### தீயில்...

மீட்கப்பட்டவராவார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் வெளிமாவட்ட ஆசிரியர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள கொத்தணி ஆசிரியர் விடுதியில் தங்கி இருந்து, திருவையாறு மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி வந்த குறித்த ஆசிரியர் நேற்று முன்தினம் கடமை முடித்து விடுதிக்குச் சென்று விடுதியில் தங்கி இருந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை குறித்த ஆசிரியர் தீயில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(ம-7,315,316)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முன்னேற்றம்


## பாராட்டத்தக்கது ஐ.எம்.எப்

(கொழும்பு)

**இலங்கையின் விரிவான பொருளாதார சீர் திருத்தத் திட்டம் குறிப்பிடத்தக்க முன்னேற் றத்தைக் காட்டுவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

நெருக்கடிக்குப் பின்னராக வலுவான மீட்சியையும் மேம் பட்ட நிதி ஆரோக்கியத்தைக் குறிக்கிறது என்றும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டி யுள்ளது.

இலங்கையின் விரிவாக்கப் பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் ஐந்தாவது மதிப்பாய்வை, சர்வதேச நாணய நிதியக் குழு தற்போது நடத்தி வருகிறது.



முன்னதாக, 2025 ஜூலை முதலாம் திகதியன்று சர்வ தேச நாணய நிதியத்தின் நிர் வாகக் குழு, தமது நான்கா வது மதிப்பாய்வை முடித்த நிலையில், இலங்கைக்கு 350 மில்லியன் டொலர் கிடைத் தன.

இதன் அடிப்படையில் இது வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம், நிதி உதவி யாக 1.74 பில்லியன் டொலரை வழங்கியுள்ளது. சர்வதேச நாணய நிதியக் கணிப்பின்படி, இலங்கைக்கான பொருளா தாரம் நம்பிக்கைக் குரியதாக மாற்றமடைந் துள்ளது.

பணவீக்கமும் தணிந்துள் ளது. அத்துடன் அரச வருமான மும் கணிசமாக மேம்பட்டுள்ள தாக சர்வதேச நாணய நிதியத் தின் தகவல் தொடர்பு பணிப் பாளர் ஜூலி கோசாக் குறிப்பிட் டுள்ளார்.

இந்தநிலையில், இலங் கையின் முன்னேற்றம் பாராட் டத்தக்கது என்றாலும், நிதி மற்றும் வெளிப்புற இடையகங் களைப் பாதுகாப்பதை நோக்க மாகக் கொண்ட சீர்திருத்தங் களுக்கு இலங்கையின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு அவசியம் என்று நிதியத்தின் தகவல் தொடர்பு பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

# தனமல்வில வெல்லவாய வீதியில் விபத்து

## ஒருவர் உயிரிழப்பு, 5 பேர் காயம்

(கொழும்பு)

தனமல்வில வெல்லவாய வீதியில் வான் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஐவர் காயமடைந்துள்ளதாக தனமல் வில தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

அவிசாவளையில் உள்ள ஆடை நிறுவனமொன்றில் வேலை நிறைவடைந்த பின் னர் புத்தள பகுதிக்கு திரும்பிக் கொண்டிருந்த குழுவினரை ஏற்றிச் சென்ற வாகனம் இவ் வாறு விபத்துக்குள்ளானது.

விபத்தில் உயிரிழந்தவர் தம்புள்ளை பகுதியை சேர்ந்த 56 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. அத்து டன் வானின் ஓட்டுநரான 18 வயது டைய சசங்க உதுல சிந்தக உட்பட இதில் பயணித்த 5 பேர் காயமடைந்து தன மல்வில பிரதேச வைத்தி யசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது. (நி)

# குரங்குகளிடையே பரவும் "சிபிலிஸ்" தொற்று நோய்!

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(பொலன்னறுவை)

பொலன்னறுவை மற்றும் கிரித்தலே பகுதிகளில் உள்ள குரங்குகளுக்கிடையே சிபி லிஸ் போன்ற பக்டீரியா தொற்று பரவுவது கண்டறியப் பட்டுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் துறை மற்றும் விலங்கு சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

வனவிலங்கு பாதுகாப்புத் துறை மற்றும் விலங்கு சுகா தார அதிகாரிகள் இணைந்து நடத்திய ஆய்வில் இந்த தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

குரங்குகளிடையே மேற் கொள்ளப்பட்ட இரத்தம் மற்றும் பிசிஆர் பரிசோதனைகள் மூலம் இந்த தொற்றுநோய் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வனவிலங்கு கால்நடை வைத் தியர் நிஹால் புஷ்பகுமார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குரங்குகளின் பிறப்புறுப்பு, தோல் மற்றும் ஆசனவாய் போன்ற உறுப்புக்களிலிருந்து இந்த தொற்று பரவக்கூடும்.

குரங்குகள் அசுத்தமான பகுதிகளில் இருப்பதன் காரண மாக இந்த தொற்று நோய் அதிகமாக பரவக்கூடும். முக்கி யமாக, குரங்குகள் அதிகமாக நடமாடக்கூடிய மத வழிபாட்டுத் தலங்களில் இந்த பக்டீரியாக் க்ள் குர்ங்குகளிட மிருந்து மனி தர்களுக்குப் பரவும் ஆபத்தான நிலையும் காணப்படுகிறது.

மனிதர்களுக்கு இந்தத் தொற்று பரவாமலிருக்க, குரங்குகளை நெருங்குவதை பொதுமக்கள் தவிர்க்க வேண் டும் என குறிப்பிட்டுள்ளார். (நி)

# போலி ஆவணங்களை பயன்படுத்தி வாகன பதிவு மோசடி

## விசாரணையில் சிக்கும் அதிகாரிகள்

(கொழும்பு)

போலியான ஆவணங் களைப் பயன்படுத்தி வாகனப் பதிவுகளை எளிதாக்கியதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில், மோட்டார் போக்கு வரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகள் சிலர் மீது விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

போலி ஆவணங்களை பயன்படுத்தி, பதிவு செய்யப்பட்ட 8 வாகனங்கள் கண்டுபிடிக் கப்பட்டதை அடுத்து, இந்த விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மைய, வாரங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளி லிருந்து இந்த வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

சுங்க அனுமதியைத் தவிர்த்து வாகனங்கள் இறக்கு மதி செய்யப்பட்டு பின்னர், பழைய வாகனங்களின் செசி எண்களைப் பயன்படுத்தி குறி த்த வாகனங்கள் பதிவு செய் யப்பட்டதாக, முதற்கட்ட விசா ரணையில் தெரியவந்துள் ளது.

இந்த சட்டவிரோத செயற் பாடு, சில மோட்டார் போக்கு வரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டதாக அதி காரிகள் சந்தேகிக்கின்றனர்.

இதனடிப்படையில், நீதி மன்ற உத்தரவின் கீழ், மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரி கள் சிலரிடமிருந்து ஏற்கனவே வாக்குமூலங்கள் பதிவு செய் யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளது. (நி)

# மருந்து பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு!

(கொழும்பு)



கடந்த வருடம் மருந்து களுக்கான கேள்விப் பத்திரங் கள் முறையாக கோரப்படாத காரணத்தால், தற்போது சில மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித் தார்.

கண்டி தேசிய மருத்துவ மனையின் 'சுவ பியச' புற்றுநோய் சிகிச்சை பிரிவைத் திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்றபோது அமைச்சர் இவ்வாறு தெரவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தற்போதுள்ள மருந்து பற்றாக்குறை இன்னும் ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக் குள் தீர்க்கப்படும். தற் போதைய மருந்து பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய பல்வேறு தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள் ளன.

மருந்து விநியோகப் பிரி வால் வழங்கப்படாத மருந்து களை தனியாரிடமிருந்து கொள்வனவு செய்ய நிதி ஒதுக் கப்பட்டுள்ளது.

சில மருந்துகள் அரசு வைத் தியசாலைகளில் மட்டுமல்ல, தனியார் சந்தையிலும் கிடைக் கவில்லை. அத்தகைய மருந்துகளை இறக்குமதி செய் யும் நிறுவனங்களுக்கு மருந்து கள் மற்றும் ஔடத ஒழுங்கு படுத்தல் அதிகார சபையால் அனுமதி வழங்கப்பட்டிருந் தாலும், சில வழங்குநர்கள் அவற்றை இறக்குமதி செய்ய வில்லை. இது பல சிக்கல் களுக்கு வழிவகுத்தது என அவர் தெரிவித்தார். (நி)

# பாடசாலை பிளாஸ்டிக் பொருட்களுக்கு SLS தர சான்றிதழ் கட்டாயம்!

(கொழும்பு)

2026 ஏப்ரல் 1 முதல் பாட சாலை மாணவர்கள் மற்றும் குழந்தைகள் பயன்படுத்தும் பிளாஸ்டிக் உபகரணங்களுக்கு SLS சான்றிதழ் கட்டாயமாக் கப்படும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச் சர் வசந்த சமரசிங்க இதனைத் தெரிவித்தார்.

அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரை யாற்றிய அமைச்சர், குறித்த திகதியிலிருந்து, நிர்ணயிக் கப்பட்ட தரங்களைப் பூர்த்தி செய்யாத பிளாஸ்டிக் பொருட் களின் உற்பத்தி மற்றும் விற் பனை முற்றிலும் தடை செய் யப்படும்.

தற்போது, குழந்தைகளுக் குப் பால் வழங்கப் பயன்படும் பிளாஸ்டிக் போத்தல்கள், மாண வர்களின் மதிய உணவுப் பெட்டிகள் மற்றும் தண்ணீர் போத்தல்கள் பல்வேறு விலை களில் சந்தையில் விற்கப்படு கின்றன.

இவற்றில் சிலவற்றிற்கு தரச் சான்றிதழோ அல்லது பயன்பாட்டிற்கு ஏற்றவை என் பதைக் குறிக்கும் அடையா ளமோ இல்லை.

நுகர்வோர் விவகார அதி காரசபையின் தகவலின்படி, சில தயாரிப்புகளில் புற்று நோய்க் காரணிகள் உள்ள தாகவும் தெரியவந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, 2026 ஏப்ரல் 1 முதல், உணவு மற்றும் திரவங்களைச் சேமிக்கப் பயன்படும் தரமற்ற பிளாஸ்டிக் பொருட்களின் உற் பத்தி மற்றும் விற்பனையைத் தடை செய்ய அமைச்சு நட வடிக்கை எடுத்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாபெரும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் சம்பியன்



வேலணை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் நடத்திய ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலருக்குமான மாபெரும் உதைபந்தாட்ட போட்டியில் அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் இரு அணியினரும் வெற்றியை தமதாக்கிக் கொண்டனர்.

அந்த வகையில் ஆண்களுக்கான இறுதிப் போட்டியில். அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் அணியை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் அணி மோதியது.

இப் போட்டியில் 2:0 என்ற கோல் கணக்கில் அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் அணி வெற்றி பெற்றது.

அத்துடன் பெண்களுக்கான இறுதி போட்டியில் அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் அணிக்கும் புங்குடுதீவு சென் மேரிஸ் அணிக்கும் நடந்த போட்டியில் 1:0 என்ற கோல் கணக்கில் அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.




## 300 கோல்கள்!

# புதிய வரலாறு படைத்த ஜேர்மனி வீரர் முல்லர்




ஜேர்மனியின் நட்சத்திரக் கால் பந்து வீரர் தாமஸ் முல்லர் தனது 300ஆவது தொழில்முறை கோல் அடித்து சாதனை படைத்துள்ளார்.

தாமஸ் முல்லர் பாயெர்ன் முனிச் கிளப் அணியில் இருந்து வான் கூவர் ஓயிட்கேப்ஸ் அணிக்கு மாறினார்.கனேடியன் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வான்கூவர் ஓயிட்கேப்ஸ் மற்றும் வான்கூவர் எப்சி அணிகள் மோதின.

இப்போட்டியில் வான்கூவர் ஒயிட் கேப்ஸ் 4:2 என்ற கோல் கணக்கில் வான்கூவர் எப்சியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

பெனால்டி வாய்ப்பில் தாமஸ் முல்லர் அடித்த கோல், தொழில் முறை கால்பந்து போட்டிகளில் அவரது 300ஆவது கோல் ஆகும்.

மேலும், கனேடிய சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றதன் மூலம், அதிக பட்டங்களை வென்ற ஜேர்மனி வீரர் எனும் வரலாறு படைத்துள்ளார்.இதற்கு முன் க்ரூஸ் 34 பட்டங்களை வென்ற நிலையில் முல்லர் 35 ஆவது பட்டத்தை பெற்று சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## மகளிர் உலகக்கிண்ணம்

# பாகிஸ்தானை வீழ்த்தி பங்களாதேஷ் அபார வெற்றி



மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது. அதன்படி. இலங்கையில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பங்களாதேஷ் பாகிஸ்தான் அணிகள் விளையாடின.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. அதன்படி அந்த அணி முதலில் துடுப்பாட்டம் செய்தது. பங்களாதேஷ் அணியின் சிறப்பாக பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து திணறியது. இறுதியில் பாகிஸ்தான் அணி 38.3 ஓவர்கள் தாக்குப்பிடித்து 129ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பங்களாதேஷ் அணியில் பந்துவீசிய அனைத்து பவுலர்களும் விக்கெட்டுகளை கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து 130 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் பங்களாதேஷ் அணி துடுப்பாட்டம் செய்தது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரரான ருப்யா ஹைதர் சிறப்பாக விளையாடி அரை சதம் அடித்ததுடன், அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார்.

இறுதியில் பங்களாதேஷ் அணி 31.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் மட்டும் இழந்து இலக்கை கடந்தது. இதன் மூலம் அந்த அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. (நி)

# ஐ.பி.எல்லில் ஓய்வு பெற்ற அஷ்வின் ஐ.எல் ரீ-20இல் விலைபோகவில்லை

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற சர்வதேச லீக் ரி-20 (ஐ.எல்.ரி-20) தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் இந்திய முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்தர் அஷ்வின் மற்றும் இங்கிலாந்து முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் இருவரும் விலைபோகவில்லை.

39 வயதாகும் அஷ்வின் சர்வதேச அளவில் லீக் கிரிக்கெட் போட்டிகளில் ஆடுவதற்காக இந்திய பிரிமியர் லீக்கில் இருந்து ஓய்வு பெற்ற நிலையிலேயே அவரை யாரும் வாங்க முன்வரவில்லை. எனினும் அவர் ஏற்கனவே அவுஸ்திரேலியாவின் பிக் பாஷ் தொடரில் ஒப்பந்தமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் நடந்த வீரர்கள் ஏலத்தில் மேற்கிந்திய துடுப்பாட்ட வீரர் அன்ட்ரே பிளட்சர் அதிக விலையாக 260.000 டொலர்களுக்கு வாங்கப்பட்டார்.(3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபூசை தினவிழாக்கள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ மலர் அம்மையாரின் 15 ஆவது குருபூசை தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி அளவில் உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 46 ஆவது குருபூசை தினம் மறவன்புலோவில் உள்ள சுவாமிகளின் சமாதி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினங்களில் பூஜைகள், ஆராதனைகள் மற்றும் சொற்பொழிவுகள் ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (3)


## கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து), மூளாய்
## புதிய இரு கட்டிடங்கள் அமைப்பதற்கான மதிப்பீடுகள் கோரல்

1) மூளாய் வைத்தியசால்லயில் 06 அறைகள் கொண்டதும் 04 அறைகள் கொண்டதுமான புதிய இரு கட்டடங்கள் அமையப் பெறவுள்ளது. எனவே அதற்காக இலங்கை நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள தகைமையுடைய அனுபவமுள்ள ஒப்பந்த நிறுவனங்களில் இருந்து 2025.10.22 மு.ப. 10.30 வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

2)விலைமனு ஆவணங்களை 2025.10.07 ஆம் திகதி தொடக்கம் 2025.10.22ஆம் திகதி வரை சாதாரண கடமை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் மற்றும் மேல் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி திகதிகளில் மு.ப. 10.00 வரை கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் மூளாய், அலுவலகத்தின் நிர்வாக பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். விலைமனு ஆவணங்களை கட்டணம் ரூபா 2,000.00 ஐ கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் மூளாய், நிர்வாக பிரிவுக்கு பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

3) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2025.10.22 மு.ப. 10.30இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் மூளாய், அலுவலகத்தின் நிர்வாக பிரிவில் சமர்ப்பிக்க முடியும். விலைமனுக்கள் இடும் கடித உறையின் இடது பக்க மேல் முலையில் விலைமனுவுடன் தொடர்புபட்ட ஒப்பந்த இலக்கத்தை சரியாக குறிப்பிட வேண்டும். மதிப்பீடுகள் திறக்கப்படும் திகதி பின்னர் அறியத்தரப்படும்.

தலைவர் / செயலாளர்
கூட்டுறவு வைத்திய சாலைச்சங்கம் (வ-து), மூளாய். (C-4016)



## கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து), மூளாய்
## பதிவு இல :- J/82-04-04-1936

**வருடாந்தப் பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல்**

**இடம்:-** கூட்டுறவு வைத்தியசாலை மண்டபம்
**காலம்:-** 25.10.2025 சனிக்கிழமை
**நேரம்:-** காலை 9.30 மணி

இக் கூட்டத்திற்குப் பொதுச்சபை அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்/ செயலாளர்,
கூட்டுறவு வைத்தியசாலைச்சங்கம், மூளாய்.
(C-4017)



# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1996- இந்து
நட்சத்திரம்: பூரடம்
8இல் செவ்
கி-பா-15 1/2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:Banking Course, BankOfficer
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/16035

பிறப்பு:1982-இந்து
நட்சத்திரம்:ரேவதி
12 இல் செவ்
கி-பா: 11 1/2
உயரம் :6"1"
தகைமை/தொழில்- BEng, MEng, Engineer(Australia)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16036

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி-பா: 33 1/4
உயரம்:6"
தகைமை/தொழில்:Dip in Computer, Work(pvt)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/16037

பிறப்பு: 2001- இந்து
நட்சத்திரம்: மகம்
7 இல் செவ்
உயரம்:5'9"
தகைமை/தொழில்-Executive officer
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16038

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்- அச்சுவினி
11 இல் சூரி செவ்
கி-பா: 04
உயரம்:5'10"
தகைமை/தொழில்:Civil Engineer (Canada)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16039

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1982-இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி-பா:22
உயரம்: 5'
தகைமை/தொழில்:MBBS,Doctor
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/16057

பிறப்பு: 1996-இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
12 இல் சூரி செவ்
கி-பா: 8 3/4
தகைமை/தொழில்: BCom
எதிர்பார்ப்பு தகுதியான ஆண்
தொ.இ: G/16059

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 68
உயரம் : 5'4"
தகைமை/தொழில் -Accountant (Australia)
எதிர்பார்ப்பு: தகுதியானஆண், விவாகரத் தானவர்கள்
தொ.இ: G/16061

பிறப்பு: 1997 - இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கிபா- 16
உயரம் : 5"
தகைமை/தொழில்: BSc,Vetnary Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/16062

பிறப்பு-1979 - இந்து
நட்சத்திரம்: திருவோணம்
8 இல் சூரிசெவ்
கிபா-0
உயரம் : 5'5"
தகைமை/தொழில்-Assistant Accountant (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியானஆண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/16063

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இராசிபலன்

04.10.2025,
புரட்டாதி 18 , சனிக்கிழமை
துவாதசி பிற்பகல் 2.34 மணிவரை

அவிட்டம் முற்பகல் 7.23 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 09.02 -10.32 மணிவரை
சனிப் பிரதோச விரதம், சித்தாமிர்த விரதம்

சந்திராஷ்டமம்- ஆயில்யம்

வளவன்

**மேஷம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**இடபம்** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்** தேகாரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், பகை விலகி பாசம் கூடும் நாள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், விரயங்கள் கூடும்.

**சிம்மம்** நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**கன்னி** மறைமுகப் போட்டிகள் அகலும், தொழிலை விரிவு படுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், கௌரவமான நாள்.

**துலாம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள்.

**விருச்சிகம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வருகையுண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்,

**தனுசு** பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், வெளியூர்த்தொடர்புகள் அனுகூலம் தரும், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைத் தரும்,

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொது வாழ்வில் புகழ் கூடும், அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரும், எதிர்கால நலன் கருதி எடுத்த முடிவுகள் கை கூடும்.

**கும்பம்** சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள் , போசன சுகமுண்டு.

**மீனம்** காரிய அனுகூலங்கள் சற்று அதிகரிக்கும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

மனிதனுக்கு துணிச்சலைப் போல உண்மையான நண்பன் வேறு யாரும் இல்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 299 மில்லியன் ரூபாய் செலவில்
## புனரமைக்கப்படவுள்ள குறிகாட்டுவான் இறங்குதுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் இறங்குதுறை புனரமைப்பு பணி மற்றும் இறங்குதுறைக்கான வீதி மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

குறிகாட்டுவான் இறங்குதுறை பகுதியில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டு பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

சுமார் 299 மில்லியன் ரூபாய் நிதி செலவில் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது. நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள் துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (8-33)

## சாவகச்சேரியில் பெண் நாய்களுக்கு இலவச கருத்தடை சத்திரசிகிச்சை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குள் நான்கு தினங்கள் பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட விருப்பதாக சாவகச்சேரி நகர சபையின் சுகாதாரப் பிரிவு அறியத்தந்துள்ளது.

இதனூடாக எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை சாவகச்சேரி பொது மைதானத்தில் ஜே/300, 301, 302 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும், 10/10 வெள்ளிக்கிழமை நுணாவில் பொது நூலகத்தில் ஜே/306, 307, 308 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும், 11/10 சனிக்கிழமை மீசாலை பொது நூலகத்தில் ஜே/318, 319 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும், 13/10 திங்கட்கிழமை மண்டுவில் செல்வவிநாயகர் சனசமூக நிலையத்தில் ஜே/303, 304 மற்றும் 305 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் தமது பெண் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சத்திரசிகிச்சையை மேற்கொள்ள முடியும்.

இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி பொது மக்கள் தங்களது வீடுகளில் காணப்படும் பெண் நாய்களை சத்திர சிகிச்சை நடைபெறும் இடத்திற்கு கொண்டு வந்து பயனடையுமாறு நகர சபை கேட்டுக்கொண்டுள்ளது. (8-30)

## வல்லை முனியப்பர் ஆலயத்திற்கு அருகில்
# பசுமை எழுச்சித் திட்டம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியான வல்லை முனியப்பர் ஆலயத்துக்கு முன்னால் பசுமை எழுச்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதற்கமைய அண்மையில் யாழ்.மாவட்ட நகர அபிவிருத்திப் பணிப்பாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர், செயலாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கள விஜயத்தில் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

மேற்படி திட்டம் கடந்த 2022 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட, நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் கைவிடப்பட்ட போது மீண்டும் அமைப்பதற்கான சூழல் உருவாகியுள்ளதால், 2026 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமையவிருக்கின்றது.

வல்லை முனியப்பர் ஆயை முன்பாக அமையவிருக்கும் ஒரு சிறிய நகரஅமைப்பின் உள்ளடக்கமானது பிரதேச சபையின் ஆலோசனைக்கமைய உணவகங்கள், கடைத் தொகுதிகள், மலசலகூடங்கள், பூங்கா, வாகனத் தரிப்பிடம், போன்றன அமையவிருப்பது குறிப்பிடத்தக்கது. (8-60)

# யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண்வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுபட, தூக்கம் சம்பந்தபட்ட பிரச்சனை தீர, தைராய்டு பிரச்சனை தீர எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் என்பன வழங்கப்படும்.

பயிற்சிகளை 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலரும் பங்குபெறலாம். பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே.சுப்பிரமணியம் அவர்கள் வழங்குவார்கள்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)

## 35 ஆவது தேசிய இளைஞர்கள்
# விளையாட்டுப் போட்டியின்
# யாழ்.மாவட்ட போட்டிகள் இன்று

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம், இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் இலங்கை இளைஞர்கள் கழக சம்மேளனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள 35 ஆவது தேசிய இளைஞர்கள் விளையாட்டுப் போட்டியின் யாழ் மாவட்ட போட்டிகள் இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (8)

# தனியார் காணி ஒன்றில் துப்பாக்கி ரவைகள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் காணி ஒன்றின் மலசல கூடக் குழியில் இருந்து பெருந்தொகையான துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

நவாலி வடக்கில் நீண்ட காலமாக பராமரிப்பு இன்றி காணப்பட்ட காணி ஒன்றினை அதன் உரிமையாளர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

அதன் போது காணிக்குள் இருந்த மலசல கூடத்தின் குழியின் மேல் மூடி உடைந்த நிலையில் காணப்பட்டதை அடுத்து, குழிக்குள் பார்த்த வேளை அதனுள் பெருமளவான துப்பாக்கி ரவைகள் காணப்பட்டுள்ளன.

அது தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் துப்பாக்கி ரவைகளை பார்வையிட்டு சென்றனர்.

துப்பாக்கி ரவைகளை மீட்க மல்லாகம் நீதிமன்றில் அனுமதி கோரி விண்ணப்பம் செய்யவுள்ளதாகவும் நீதிமன்ற அனுமதி கிடைத்ததும் அவற்றை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-33-104)



இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு, யாழ் மாவட்ட சென் ஜோன் அம்புலன்ஸ் படையினர் ஆகியோர் இணைந்து கடந்த முதலாம் திகதி புதன்கிழமை யா/ கொழும்புதுறை துரையப்பா மகா வித்தியாலயத்தில் சிறுவர் தின விழாவினை நடத்தினர்.

அதன் போது மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக பொலிஸாரினாலும் முதல் உதவி தொடர்பாக சென் ஜோன் அம்புலன்ஸினராலும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது.



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 160 | 350 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 180 | 200 |
| தக்காளி | 200 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 |
| கோவா | 200 | 150 | 200 |
| கரட் | 200 | 300 | 300 |
| பூசணி | 50 | 60 | 100 |
| புடோல் | 100 | 200 | 150 |
| வ்ாழைக்காய் | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 150 |
| பாகற்காய் | 450 | 500 | 400 |
| வெண்டக்காய் | 150 | 250 | 100 |
| கருணைக் கிழங்கு | 350 | 240 | 250 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 |
| லீக்ஸ் | 200 | 200 | 250 |
| பீற்றூட் | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 300 |
| போஞ்சி | 450 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 60-120 | 150 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 |
| இராசவள்ளி | 750 | 1000 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 400 |
| முள்ளங்கி | 150 | 160 | 150 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 100 |
| வல்லாரை | 100 | 60 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் உலக குடியிருப்பு தின நிகழ்வு




(கண்டாவளை)

உலக குடியிருப்பு தினம் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதத்தின் முதல் திங்கட்கிழமை அன்று அனுஸ்டிக்கப்படுகிறது.

அந்தவகையில் உலக குடியிருப்பு தினத்தையொட்டி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் "சொந்தமான வீடு அழகான வாழ்க்கை" எனும் தொனிப்பொருளில் உலக குடியிருப்பு தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது இலட்சம் பெறுமதியான வீட்டுத்திட்ட பயனாளிகள் 33 பேரும் மற்றும் 15 இலட்சம் பெறுமதியான வீட்டுத்திட்ட பயனாளிகள் 71 பேருமாக மொத்தமாக 104 வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கான பயனாளி தெரிவுச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் குறித்த தினத்தை நினைவுகூரும் வகையிலும், வீடுகளை அமைக்கும் போது இயற்கை வளங்களுக்கு தீங்கு விளைவிப்பதை தடுக்கும் செயற்பாட்டை வலியுறுத்தும் நோக்கில் குறித்த பயனாளிகளின் வீட்டு வளாகத்தில் நடுகை செய்வதற்கு நான்கு தென்னங்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (8-315)

# கரைச்சி பிரதேச சபை பொது நூலகத்தின் புத்தகக் கண்காட்சி



(கிளிநொச்சி)

மாணவர்கள் மத்தியில் நூலக பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்குடன் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கரைச்சி பிரதேச சபை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் புத்தக கண்காட்சி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச சபை பொது நூலக நூலகர் சசிகலா ரவீந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன் கலந்து கொண்டார்.

கரைச்சி பிரதேச சபை பொது நூலகத்தின் இருப்பிலுள்ள புத்தகங்களுடன் புதிய புத்தகங்களும் இணைந்த வகையில் குறித்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் பிரதேச சபை செயலாளர் தங்கபாண்டி ஞானராஜ், செல்வாநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை முதல்வர், பிரதேச சபை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பார்வையற்றவர்கள் கற்க கூடிய புத்தகங்கள் உள்ளடங்கலாக மாணவர்கள் முதல் அனைவரும் பயன்பெறும் வகையில் குறித்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த புத்தகக் கண்காட்சி இன்றைய தினமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# நேருக்கு நேர் மோதி இரு டிப்பர்கள் விபத்து

(தருமபுரம்)

கிளிநொச்சி - முகமாலை வேம்படுகேணி பகுதியில் ரயில் கடவைக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு இரண்டு டிப்பர் வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் சிக்குண்ட ஒரு டிப்பர் வாகனம் ரயில் மார்க்கத்தில் கவிழ்ந்த நிலையில், பெக்கோ இயந்திரம் மூலம் அதனை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண திசையிலிருந்து பயணித்த டிப்பர் வாகனமும் கிளிநொச்சி திசையிலிருந்து பயணித்த மற்றொரு டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்த பேருந்து ஒன்று மக்களை இறக்குவதற்கு குறித்த பகுதியில் தரித்து நின்ற போது அதனை டிப்பர் வாகனம் ஒன்று முந்தி செல்ல முற்பட்ட போதே இவ்விபத்து இடம்பெற்றது.

விபத்தில் டிப்பர் வாகன சாரதிகள் காயமடைந்த நிலையில் பளை பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பளை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-316)


# கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் வெடிகுண்டுகள் மீட்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை வடக்கு பகுதியில் நேற்று முன்தினம் வெடிக்காத நிலையில் 31 குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, முகமாலை வடக்குப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் தமது வீட்டினை சுத்தம் செய்யும் போது பள்ளம் தோண்டி உள்ளார். அப் பிரதேசத்தில் ஆபத்தான நிலையில் வெடிக்காத குண்டுகள் காணப்பட்டதை அவதானித்த வீட்டு உரிமையாளர் பளை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அதன் பின்னர் கிளிநொச்சி



நீதிமன்றத்தின் உத்தரவுடன் பாதுகாப்பான முறையில் வெடிகுண்டுகளை மீட்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-316)

# கலந்துரையாடல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான கல்மடுக்குளத்தின் கீழான 2025/ 2026 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

2025/2026 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கையினை ஆரம்பிக்கப்படுவதற்கான முன்னாயத்த கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு பயிர்ச் செய்கைக்கான கால அட்டவணை தயாரிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நெற்செய்கைக்கான ஆரம்ப விதைப்பு திகதியாக 01.10.2025 ஆம் திகதி தொடக்கம் 05.11.2025 ஆம் திகதி வரையான காலப்பகுதி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், நீர்பாசனத்திற்கான ஆரம்ப காலப்பகுதியாக 05.11.2025 ஆம் திகதி தொடக்கம் 15.02.2026 ஆம் திகதி காணப்படுகின்றது. இதனை விட 28.02.2026 அறுவடைக்கான முடிவுத் திகதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (8-315)

(தருமபுரம்)

கிளிநொச்சி அக்கராஜன் குளத்தின் கீழான 2025/ 2026 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல் கரைச்சி பிரதேச செயலாளர் தவச்செல்வன் முகுந்தன் தலைமையில் ஸ்கந்தபுரம் நீர்ப்பாசன வளாகத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசன பொறியியலாளர் தட்சணாமூர்த்தி ரிஷியந்தன், மாவட்ட விவசாயப்பணிப்பாளர், அக்கராஜன் கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய விரிவாக்க உத்தியோகத்தர், கமநல காப்புறுதிச்சபை உத்தியோகத்தர், விவசாயிகள் கலந்து கொண்டனர். அக்கராஜன் குளத்தின் கீழ் 2889 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (8-316)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வடமராட்சி தேசிய மக்கள் சக்தி பொது மக்கள் தொடர்பாடல் காரியாலயத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பருத்தித்துறை, 1 ஆம் கட்டை பிரதான வீதியில், (சூரியமஹால் மண்டபத்திற்கு அருகாமை) இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்களின் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீ பவானந்தராஜா, ஜெ.ரஜீவன் மற்றும் க.இளங்குமரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (3-60)

# நிலம் இருந்தும் வளம் இல்லாதோர் வளம்பெற வழிவகை

(நெளுக்குளம்)

விசுவமடு கிராம மக்களுக்கான 50 ஆயிரம் ரூபா வட்டியில்லா கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் விசுவமடு கிழக்கு அட்டைக்குளம் சிறுவர் பூங்காவில் இடம்பெற்றிருந்தது.

பொருளாதார ரீதியாக பின்னடைவை சந்தித்த மக்களை முன்னோக்கி கொண்டு செல்லும் நோக்கோடு நிலம் இருந்தும் வளம் இல்லாத மக்களை வளப்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட விவசாயம், பயிர்ச்செய்கை செய்யும் 19 பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் விகிதம் வட்டி இல்லா கடனாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

விசுவமடு கிழக்கு, மேற்கு பகுதிகளில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விசுவமடு கிராம மக்களுக்கு சுழற்சி முறையில் வட்டி இல்லா கடன் வழங்கப்பட இருக்கின்றது. எதிர்வரும் காலங்களில் மாணவர்கள், முதியோர்கள், விவசாயிகளுக்கான திட்டங்களும் முன்னெடுக்கப்பட இருக்கின்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே. கரிகாலனின் நெறிப்படுத்தலுடன் அன்பாலயம் அமைப்பினரின் நிதி அனுசரணையோடு விசுவமடு கிராம மக்களின் ஒழுங்குபடுத்தலில் ஆரம்பமான குறித்த நிகழ்வில் விசுவமடு கிழக்கு கிராம சேவையாளர் வி.கோணேஸ்வரன், திட்ட இணைப்பாளர் தீ. அனுஸ்ரியா, பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-299)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பாகிஸ்தானில் அரசுக்கு எதிரான போராட்டம் தீவிரம்

### 12 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் போராட்டக்காரர்கள் மீது பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் குறைந்தது 12 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இந்திய ஊடக செய்திகளின்படி, 38 முக்கிய கோரிக்கைகளை பாகிஸ்தான் அரசாங்கம் நிறைவேற்றத் தவறியதால் போராட்டம் தொடங்கியதாக கூறப்படுகிறது.

இப்போது இராணுவ அத்துமீறல்களுக்கு எதிராக பாரிய அளவிலான போராட்டமாக அது விரிவடைந்துள்ளது.

இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடர்ந்து மூன்றாவது நாளாக கொந்தளிப்பு தொடர்ந்தது. தத்யாலில் போராட்டக்காரர்களுக்கும் பாகிஸ்தான் இராணுவத்திற்கும் இடையே வன்முறை மோதல்கள் நடந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிலைமையைக் கட்டுப்படுத்தும் முயற்சியில், அதிகாரிகள் ஆயிரக்கணக்கான மேலதிக வீரர்களை அப்பகுதிக்கு அனுப்பியுள்ளனர்.

முசாபராபாத்தில் ஐந்து போராட்டக்காரர்களும், தீர்கோட்டில் ஐந்து பேரும், தத்யாலில் இரண்டு பேரும் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புப் படையினரும் உயிரிழந்துள்ளனர்.

வன்முறையில் குறைந்தது மூன்று பொலிஸ் அதிகாரிகள் இறந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அமைதியின்மை ஒரு பகுதியில் மட்டும் நிற்கவில்லை.

முசாபராபாத்துடன், ராவலகோட், நீலம் பள்ளத்தாக்கு மற்றும் கோட்லி ஆகிய இடங்களிலும் வன்முறை சம்பவங்கள் மற்றும் மோதல்கள் பதிவாகியுள்ளன,

இது நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்துகிறது.

ஊடக அறிக்கைகளின்படி, 200இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

அவர்களில் பலர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களால் ஆபத்தான நிலையில் உள்ளதாக கூறப்படுகிறது.

இஸ்லாமாபாத் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பதாக குற்றம் சாட்டி, கூட்டு அவாமி நடவடிக்கைக் குழு இந்தப் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

பிராந்தியம் முழுவதும் சந்தைகள், கடைகள் மற்றும் போக்குவரத்து சேவைகள் மூடப்பட்டுள்ளன. (நி)



## விஜய் கைது

## தமிழக அரசின்

(சென்னை) ●●●●●●●●

கரூர் துயரச் சம்பவ

விசாரித்து வரும் ஆணை

பரிந்துரைத்தால் தமிழக

றிக்கழகத் தலைவர் விஜய்

செய்யப்படுவார் என்று

செய்தி தொடர்பாளர் டி.கே

இளங்கோவன் தெரிவித்

ளமை பரபரப்பை ஏற்ப

யுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், "விஜய் மீது ஏன் வழக்கு பதிவு செய்யப்படவில்லை? அரசுக்கு அச்சமா?" என்று கேள்வி எழுப்பியிருந்த நிலையில், அதற்கு பதிலளிக்கும் வகையில் டி.கே.எஸ். இளங்கோவன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 41

## இஸ்ரேலின் வான் தாக்குதலில்

## காசாவில் 53 பேர் உயிரிழப்பு!

### ட்ரம்பின் திட்டத்திற்கு சிக்கல்



(ஜெருசலேம்)

காசாவில் நேற்று முன்தினம் இஸ்ரேலின் வான் வழித் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது 53 பேர் கொல்லப்பட்டனர்.

பாதுகாப்பான மண்டலமாக அறிவிக்கப்பட்ட தெற்கு அல்-மசாவி உட்பட காசா முழுவதும் இஸ்ரேல் இராணுவம் வான் மற்றும் தரைவழித் தாக்குதல்களை நடத்தியது.

கடந்த புதன்கிழமை அன்று மக்கள் தங்கள் பகுதிகளை விட்டு வெளியேற்ற இறுதி எச்சரிக்கை விடுத்த இஸ்ரேல் தெற்கில் இருந்து வடக்கு காசாவுக்குச் செல்லும் வழியை அடைத்தது.

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், தங்கள் படைகள் காசா நகரை சுற்றிவளைக்கும் நிலைக்கு நெருங்கிவிட்டதாகவும், அங்கிருந்து வெளியேறாமல் எஞ்சியிருக்கும் எவரும் பயங்கரவாதிகள் அல்லது பயங்கரவாத ஆதரவாளர்கள் என்று கருதப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

இதற்கிடையே கடந்த திங்களன்று அமெரிக்கா விரைந்த இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு ட்ரம்பின் 20 அம்ச போர் நிறுத்த திட்டத்தை ஏற்றுக்கொண்டார். இதில் ஹமாஸ் முடிவெடுக்க ட்ரம்ப் அழுத்தம் கொடுத்து வருகிறார்.

திட்டத்திற்கு ஹமாஸ் ஒப்புதல் அளிக்கும் என்று வெள்ளை மாளிகை எதிர்பார்ப்பதாக அமெரிக்க ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் வியாழக்கிழமை தெரிவித்தார்.

20 அம்ச திட்டத்தின் கீழ், ஹமாஸ் ஆயுதங்களை கைவிட்டு, 48 பணயக் கைதிகளை விடுவித்து, அரசியலில் இருந்து வெளியேற வேண்டும்.

பதிலுக்கு, இஸ்ரேல் கிட்டத்தட்ட 2,000 பாலஸ்தீனிய கைதிகளை விடுவித்து, காசாவில் ஒரு அமைதி காக்கும் படை அவர்களை மாற்றிய பிறகு படிப்படியாக தனது படைகளை வாபஸ் பெறும்.

இந்தத் திட்டத்தை ஏற்பது குறித்து ஹமாஸ் கலந்தாலோசித்து வரும் நிலையில் இத்தாக்குதல் பின்னடைவாக அமைந்துள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## து செய்யப்படுவார்! அறிவிப்பால் பரபரப்பு

........
பவத்தை
ணையம்
ழக வெற்
ய் கைது
பு திமுக
கே.எஸ்.
வித்துள்
படுத்தி



பேர் உயிரிழந்தது குறித்து விசாரிக்கும் ஆணையம், "விஜய் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பரிந்துரைத்தால், அவர் நிச்சயமாக கைது செய்யப்படுவார் என்று கூறினார்.

மேலும், சம்பவத்தின் போது விஜயும் அதே இடத்தில் இருந்து நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தால் மட்டுமே அவர் மீது முதலில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றும் விளக்கினார்.

விஜய் பரப்புரைக்காக மட்டுமே வந்தவர் என்றும், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மீதுதான் முதலில் வழக்கு பதிவு செய்யப்படுவது முறை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## அத்துமீறிய ட்ரோன் ஊடுருவலால் ஜேர்மன் விமான சேவை பாதிப்பு




(பெர்லின்)

ஜேர்மனின் மியூனிக் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை சந்தேகத்திற்கிடமான ட்ரோன்கள் பறந்ததை அடுத்து, விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இதன் விளைவாக, 17 விமானங்கள் இரத்து செய்யப்பட்டதுடன், ஜேர்மன் நகரில் சுமார் 3,000 பயணிகள் பாதிக்கப்பட்டனர்.

அத்துடன், மியூனிக் விமான நிலையம் மேலும் 15 விமானங்களை அருகிலுள்ள நகரங்களுக்கு திருப்பிவிட்டதாகவும் கூறப்படுகிறது.


அதன்படி, மியூனிக்கில் தரையிறங்க வேண்டிய விமானங்களை ஸ்டட்கார்ட், நியூரம்பெர்க், வியன்னா மற்றும் பிராங்பேர்ட்டுக்கு திருப்பி அனுப்பி விடப்பட்டன.

ட்ரோன்கள் எங்கிருந்து வந்தன என்பது குறித்து உடனடியாக உறுதிப்படுத்தப்படாத நிலையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போலந்து, ருமேனியா, லாத்வியா, எஸ்டோனியா மற்றும் டென்மார்க் உள்ளிட்ட பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அண்மையில் அத்துமீறிய ட்ரோன் நடவடிக்கைகளில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ள நிலையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. (நி)

## அழுத்தங்களுக்கு இந்தியா ஒருபோதும் அடிபணியாது

### ரஷ்ய ஜனாதிபதி



(மொஸ்கோ)

இந்திய பொருட்களுக்கு 50 சதவீதம் இறக்குமதி வரியை டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு விதித்துள்ள சூழலில், அயலக அழுத்தங்களுக்கு இந்தியா அடிபணியாது என ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.

இந்தியா உள்ளிட்ட 140 நாடுகள் பங்கேற்ற, ரஷ்யாவின் சோச்சி நகரில் நடைபெற்ற சர்வதேச அளவிலான பாதுகாப்பு நிகழ்விலேயே புடின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "ரஷ்யாவின் வர்த்தக ரீதியான கூட்டாளிகள் மீது அதிக வரிகள் விதிக்கப்பட்டால், அது உலக அளவில் எரிசக்தி பொருட்கள் மீதான விலையை உயர்த்தும். இதன் காரணமாக அமெரிக்க ஃபெடரல் மத்திய ரிசர்வ் வங்கி வட்டி விகிதத்தை அதிகரிக்க வேண்டிய சூழல் ஏற்படும். மேலும், இதனால் அமெரிக்க பொருளாதாரம் மந்தமாகும்.

இந்தியாவுடன் எங்களுக்கு எப்போதும் சிக்கல் இருந்ததில்லை. நிச்சயம் அயலக அழுத்தங்களுக்கு இந்திய தேசம் அடி பணியாது. அது மாதிரியான நகர்வை பிரதமர் மோடி அனுமதிக்கமாட்டார்.

இந்திய தேசம் ரஷ்யாவில் இருந்து எரிசக்தி பொருட்களை வாங்குவதை நிறுத்தினால் சுமார் 9 பில்லியன் முதல் 10 பில்லியன் டொலர்கள் வரை ரஷ்யாவுக்கு இழப்பு ஏற்படும்.

அமெரிக்க வரிவிதிப்பால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ரஷ்யா ஈடு செய்யும். அந்தவகையில் இந்தியாவில் இருந்து விவசாய பொருட்கள் மற்றும் மருந்துகளை ரஷ்யா வாங்கும். இதோடு நட்பு நாடு என்ற அந்தஸ்தும் இருக்கும். ஒருபக்கம் ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி விவகாரத்தில் இந்தியாவுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கிறது. அதே நேரத்தில் வேறு சிலவற்றில் ரஷ்யாவை சார்ந்தே அமெரிக்கா உள்ளது.

அமெரிக்க சந்தைக்கு தேவைப்படும் யுரேனியத்தை விநியோகிக்கும் நாடுகளில் ரஷ்யா இரண்டாம் இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது" இவ்வாறு ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர் மாத இராசி பலன்கள்

## தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள்!



**கிரகநிலை** - இராசியில் சுக்கிரன், கேது - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் செவ்வாய், புதன் - களத்திர ஸ்தானத்தில் சனி, இராகு - லாப ஸ்தானத்தில் குரு என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் பயணங்கள் ஏற்படலாம். குருவின் சஞ்சாரத்தின் மூலம் மனக் குழப்பம் நீங்கி தெளிவான முடிவு கள் எடுப்பீர்கள். மற்றவர்களிடம் கெட்ட பெயர் வாங்க நேரிடலாம். உணவுக் கட்டுப்பாடு அவசியம்.

குடும்ப நிம்மதி குறையக் கூடும். வீடு வாகனங்களுக்கான செலவு கூடும். பிள்ளைகளுக்காக கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் உண் டாகும்.

இலாபம் குறையக்கூடும். புது வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக முடியும்.


உத்தியோகத்தில் இருப்பவர்கள் நீண்ட நேரம் பணியாற்ற வேண்டி இருக்கும். பொறுப்புடன் செய லாற்றுவது நல்லது. புதிய பொறுப்புகள் சுமையாக வரும்.

பெண்களுக்கு எதிர்பார்த்த காரியங்கள் நடந்து முடியும். கலைத்துறையினருக்கு எதிர்பாராத செலவுகள் உண்டாகும். வீண் கவலை இருக்கும்.

அரசியல்வாதிகளுக்கு மற்ற வர்களால் மனக் கஷ்டம் ஏற்படும். மாணவர்களுக்கு கவனத் தடு மாற்றம் ஏற்படாமல் பாடங்களை படிப்பது நல்லது.

பொறுப்புகள் கூடும். எதிர்பார்த்த மதிப்பெண்கள் கிடைக்கும்.

**மகம்:** இந்த மாதம் ஆடை அணிகலன்கள் விற்பனை செய்வோருக்கு ஏற்ற காலம் இது. தங்கள் தொழிலை விரிவுபடுத்திக் கொள்ள சரியான சமயம் இது.




கலைத்துறையினருக்கு ஓரளவு முன்னேற்றம் கிடைக்கும். தாங்கள் மேன்மையடைந்திட புதிய வாய்ப்புகள் வந்து சேரும்.

**பூரம்:** இந்த மாதம் தேவையற்ற வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம்.

யாரைப் பற்றியும் விமர்சனம் செய்ய வேண்டாம். தந்தையார் உடல்நிலை முன்னேற்றம் ஏற்படும். தந்தையுடன் கருத்து பரிமாற்றம் செய்யும் போது கவனம் தேவை. வேலை செய்யும் இடங்களில் மிகவும் எச்சரிக் கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

**உத்திரம் 1ஆம் பாதம்:** இந்த மாதம் சந்தான பாக்கியம் கிட்டும். தெய்வ யாத்திரை, புனித ஸ்தலங்களுக்கு செல்வது போன்ற நல்ல விடயங்கள் நடக்கும்.


முன்னோர்களை வழிபட மறக்க வேண்டாம். கோபம் கூடவே கூடாது. இரத்தம் சம்பந்தப்பட்ட வியாதி வருவதற்கு வாய்ப்பிருக்கிறது.

**பரிகாரம்:** சிவனுக்கு எலுமிச்சைப் பழ அபிஷேகம் செய்து வணங்கி வர எல்லா நன்மைகளும் உண்டாகும். தொழில் போட்டிகள் குறையும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** ஒக் 06, 07

**அதிர்ஷ்ட தினங்கள்:** ஒக் 15, 16

## வாழ்வில் இடர்பாடுகள் நீங்கும்!



**கிரகநிலை** - இராசியில் சூரியன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய், புதன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி, ராகு - தொழில் ஸ்தானத்தில் குரு - அயன சயன போக ஸ்தானத்தில் சுக்கிரன், கேது என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் வீண் அலைச்சல் உண்டாகும். அதே வேளையில் அடுத்தவர் செயல்களுக்கு பொறுப்பேற்காமல் இருப்பது நல்லது. குடும்பத்தில் ஏதாவது சிறு சிறு சண்டைகள் ஏற்படலாம். சகோதரர்கள், தந்தையிடம் வீண் வாக்கு வாதங்கள் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் இடர்பாடுகள் நீங்கும். ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. கடன் கொடுக்கும்போது கவனம் தேவை. வாகன வசதி உண் டாகும். அடுத்தவர்களிடம் வாக்கு வாதத்தை தவிர்ப்பது நன்மை தரும்.

நீண்டதூர தகவல்கள் நல்ல வையாக இருக்கும். உத்தி யோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்புக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். சக ஊழியர்களுடன் சாமர்த்தியமாக பழகி காரிய அனு கூலம் அடைவீர்கள். அலுவலக விவகாரங்களில் சாமர்த்தியமாக நடந்து கொண்டு எல்லாவற்றை யும் சமாளிப்பீர்கள். மேலிடத்தில் மனம் விட்டு பேசுவது கருத்து வேற்றுமை ஏற்படாமல் தடுக்கும்.

பெண்களுக்கு சமையல் செய்யும்போது கவனம் தேவை. கலைத்துறையினருக்கு வெளி நாடு வாய்ப்புகள் வந்து சேரும். உங்களின் திறமை பளிச்சிடும். அரசியல்வாதிகளுக்கு தன்னம் பிக்கை அதிகரிக்கும். பயணங்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். மாணவர்களுக்கு இருசக்கர வாகனங்களைப் பயன்படுத்தும் போது கவனம் தேவை. பாடங்களை கவனமாக படிப்பது நல்லது.

**உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் பொருட்கள் திருட்டு போகலாம். ஜாக்கிரதை. ஞாபக சக்தியை




இழக்காமல் இருப்பதற்கு மனதை சஞ்சலத்தில் ஆழ்த்தக் கூடாது. பயிற்சியினால் அது சாத்தியமாகும். கலைத்துறையினருக்கு ஓரளவு நன்மைகள் வந்து சேரும். ஓரளவு சோதனைகளும் இருக்கும்.

**அஸ்தம்:** இந்த மாதம் செலவுகளை திட்டமிட்டு செய்வது நல்லது. புதிய காரியங்களை செய்ய தொடங்குவதற்கு முன் நல்ல நேரம், காலம் பார்த்து செய்வது நல்லது. வேலையில் இருந்த பளு கொஞ்சம் கொஞ்சமா கக் குறையும். அதில் இருந்து வந்த சுணக்க நிலையும் மாறும். வெளிநாட்டு வேலை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு நல்ல செய்தி வந்து சேரும்.

**சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. வெளிநாட்டில் வசிப்பவர்கள் நாடு திரும்பி இங்கே தொழில் தொடங்குவதற்கு வாய்ப்புகள் அதிகரிக்கும். எதிரிகளின் தொந்தரவுகள் இருக்கும் இடம் தெரியாமல் மறையும். உத்தி யோகஸ்தர்களுக்கு விரும்பிய பணி உயர்வு கிடைக்கும்.

**பரிகாரம்:** ஐயப்பனை தரிசித்து வணங்கி வர எதிர்பார்த்த காரிய நன்மைகள் உண்டாகும். செல்வம் சேரும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** ஒக் 08, 09

**அதிர்ஷ்ட தினங்கள்:** ஒக் 17, 18

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கால்நடைப் பண்ணைகள் ஏன் தோல்வியடைகின்றன?



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

அண்மை நாட்களாக கால்நடை வளர்ப்பில் பல பண்ணைகள் உடனடி வருமானம், இலாபத்தை நம்பி தொடங்கப்பட்டு தோல்வியடைகின்றன. இங்கு பெருமளவு பணமும் நேரமும் வீணாகுவதை அவதானிக்க முடிகிறது.

நேர்மையாக செய்யப்படும் எந்த தொழிலும் இலாபத்தை தர சிறிது காலம் எடுக்கும். சமையலை எடுத்துக் கொள்வோம், ஒரு சிறந்த சமையல்காரராக வர ஒருவருக்கு பல வருடங்கள் பிடிக்கும். இதை இப்பிடியும் சொல்லலாம் .ஒருவர் வாய்க்கு ருசியாக சாப்பாட்டைத் தயார் செய்ய அவருக்குப் பல நாட்கள் எடுக்கும். பல தடவைகள் சமையல் செய்ய வேண்டும்.அவரின் சமையலை உண்பவர்களின் ஏச்சுகளை, ஏளனங்களை தாங்க வேண்டும்.கலவைகளை மாற்றி மாற்றி செய்துதான் சிறந்த கைப்பக் குவத்தை பெற முடியும். இது போன்று தொடர்ச்சியாக பல தவறுகளை செய்தும் திருத்தியும் தான் தொழில்களில் பலர் தேர்ச்சி பெறுகின்றனர். அதாவது எந்த தொழிலும் இப்படித்தான். அனுபவமும் பொறுமையும் மிக அவசியம்.


அண்மை நாட்களில் யூடியூப் போன்ற தளங்களில் வெற்றிகரமான கால்நடை வளர்ப்பு,மாதத்தில் இரண்டு லட்சம் வருமானம்,கைநிறைய காசு என பல காணொளிகளை காணமுடிகிறது. இவற்றை பார்த்த பலர் தாங்களும் இந்த மாதிரி கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவதை காணமுடிகிறது.அதாவது லட்சக் கணக்கில் உடனடி வருமானத்தைப் பெற சிலர் தாங்கள் பார்த்துவரும் பணிகளைத் துறந்தும் ஆடு மாடு கோழி வளர்க்க புறப்பட்டு கையை சுட்டுக் கொள்வதை காண முடிகிறது. இன்னொரு தரப்பு இயற்கை வேளாண்மை முறையையும் இயற்கையோடு இணைந்த கால்நடை வளர்ப்பையும் செய்யப் போகிறோம் என சூறாவளியாக கிளம்பி விளைச்சலும் இல்லை கால் நடையும் இல்லாமல் உற்பத்தியும் இல்லாமல் நிற்கின்றனர்.ஆண்டாண்டு காலமாக எங்கள் முன்னோர்கள் செய்த கால்நடை வளர்ப்பையும் இயற்கை வேளாண் முறைகளையும் எங்களால் செய்ய முடியாதா? யாரும் இந்த இயற்கை வேளாண்மை கால்நடை வளர்ப்பில் வெற்றியடையவில்லையா? என்று நீங்கள் ஆதங்கப்படுவது புரிகிறது.

பலர் கால்நடை வளர்ப்பில் வெற்றி கண்டுள்ளனர் என்பது உண்மை. எனினும் சரியான வேளாண் முறைகளைக் கடைபிடிக்காமல் அரை வேற்காட்டுத்தனமாக செயற்பட்டு வெற்றி பெற்றவர்களை விட பல மடங்கில் முயற்சியாளர்கள் தோற்றுப் போகின்றனர் என்பதால் அதற்குரிய காரணாங்களையும் முடிந்தவரை தீர்வுகளையும் இந்த கட்டுரை. ஆராய்கிறது. குறிப்பாக கால்நடை வளர்ப்பு தொடர்பாக விலாவரியாக ஆராய்வோம்.பண்ணைகளின் தோல்விக் கதைகளை,காரணிகளை அவற்றை எப்படி செய்திருந்தால் அவை தப்பிப் பிழைத்திருக்கும் என்பதை, புதிதாக தொடங்கப்படும் சில கால் நடைப் பண்ணைகளை பாருங்கள். பாரிய முதலீட்டில் தொடங்கப் படுகின்றன.ஒரு ஐடியல் பண்ணை எப்படி இருக்க வேண்டுமோ சகல விடயங்க ளும் அந்த பண்ணைகளில் இருக்கும் . ஆனால் அந்த பண்ணைகள் சிறிது காலத்தில் தோல்வியடைகின்றன.ஏன் என்று பார்தால் பல அடிப்படை விடயங்களை அந்த பண்ணையை தொடங்கியவர் தவற விட்டிருப்பார்.

உண்மையில் பண்ணையின் உரிமையாளர் பெரும்பாலும் கால்நடை வளர்ப்பு தொடர்பான எந்த வித அனுபவமோ அறிவோ கொண்டிருக்க மாட்டார். வெறும் கேள்வி ஞானம்தான். அல்லது YouTube போன்ற இணைய தளத்தில் வரும் உசுப்பல்களையும் இப்படி யான பண்ணை தொடங்குபவரின் பணத்தை சுருட்ட காத்திருக்கும் வட்ஸ்அப் குழுக்களின் மாயா ஜாலத்தில் மயங்கியவராகவோ இருப்பார்.

குறிப்பாக புலம் பெயர்ந்த தமிழர்கள் பலர் இங்கு பல கால்நடைப் பண்ணைகளை உறவினர்களை மேற்பார்வையாளராக விட்டே தொடங்கியிருப்பர். அந்த உறவினர் வேலைக்கு பலரை நியமித்து பண்ணைகளை பராமரிப்பார். வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்கள் அங்குள்ள பண்ணைகள் மூலம் கிடைக்கும் வருமானத்தை பார்த்துவிட்டு அப்படியே இங்கும் அந்த பண்ணைகளை தொடங்க எத்தனிக்கின்றனர். பல பண்ணைகளில் வேலையாட்கள் உணர்வு ரீதியாக அணுகாமல் பணத்தை எவ்வளவுக்கு எடுக்க முடியுமோ எடுக்கும் விதமாக செயற்பட்டு பண்ணையை மூடும் நிலைக்கு கொண்டு வந்து விட்டுள்ளனர்.பல வருடங்களாக இந்த மாதிரி தொடங்கப்பட்ட பல பண்ண களின் முடிவுகளை அறிந்தவன் என்ற வகையில் ஆதங்கத்துடன் இந்த கட்டுரையை எழுதுகிறேன்.

பெரும் முதலீட்டுடன் தொடங்கப்படும் இந்த பண்ணைகள் சரியான அளவுத் திட்டங்கள் ,பொருத்தமான இடத்தெரிவுடன் அமைக்கப்பட்டிருக்காது. வாகனங்கள் செல்லாத, தண்ணீர் வசதியற்ற, மின்சார வசதியற்ற ,பால் முட்டை போன்ற உற்பத்திகளை இலகுவில் விற்க முடியாத , பண்ணைப் பொருட்களை அவசரத்தில் வாங்கமுடியாத, கால்நடை வைத்திய வசதியற்ற,யானைகள் சிறுத்தைகள் நடமாடும் அபாயகரமான இடங்களாக இருக்கும். அதாவது. ஒரு கால்நடைப் பண்ணை தொடங்க பொருத்தமற்ற இடம். பண்ணைகளில் கட்டப்படும் கட்டுமானங்கள் கூட எதற்காக அமைக்கப்பட்டன என புதிராக இருக்கும். அந்தந்த பண்ணைகளும் கால் நடைகள் அமைந்துள்ள காலநிலை வலயத்துக்கும் பொருத்தமற்றவை.



எனக்கு தெரிந்த இரண்டு பண்ணைகளை குறிப்பிடுகிறேன்.பளையில் ஒரு கோழிப் பண்ணை. அங்கு மின்சார வசதியும் இல்லை ஒழுங்கான தண்ணீர் வசதியும் இல்லை. பல இலட்சம் ரூபா முதலீட்டில் தொடங்கப்பட்டது. மின்சாரத்துக்கு சக்தி மிக்க ஜெனரேட்டர்களை பாவித்திருந்தனர். அதற்கே மாதம் பல லட்சம் செலவாகியிருக்கும்.கோழிகளும் உருப்படியாக வளர்வதுமில்லை.மழை காலத்தில் தண்ணீர் தேங்குவதால் கோழிகள் நோய்ப்பட்டு இறந்தன. குடி தண்ணரில் உப்பு அதிகம் இருப்பதால் அதிக செலவில் வெளியிலிருந்தே கொண்டு வர வேண்டி இருந்தது. தவறுகளை சுட்டிக்காட்டினால் அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் அங்கிருந்த தொழிலாளியிடமோ முகாமையாளரிடமோ இருக்கவில்லை.பண்ணையையும் அவர்களையும் பார்த்தவுடன் புரிந்து விட்டது. நீண்ட காலம் நிலைக்காது என்று. யாருடைய பணம் அநியாயமாக போகிறது என்று.தீர விசாரித்தபோது.புலம் பெயர் தமிழர் ஒருவர் இங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பை கொடுக்க வேண்டும் என எண்ணி [illegible] ஒருவரிடம் இது தொடர்பாக கேட்க, அவர் தான் இந்த இடத்தில் இந்த முறையில் பண்ணையை போட்டிருக்கிறார். வெளிநாட்டு நபர் ,பளை தான் பண்ணை அமைக்க சரியான இடம் ,அங்கு மற்றபடி எதுவுமே செய்ய.தேவையில்லை தானாக பண்ணை வளரும் என அவர் மனதில் நீண்ட காலமாக பதிந்து வைத்து இருந்த எண்ணம் காரணமாக பல இடங்களில் தேடி பொருத்தமற்ற மின்சாரம் இல்லாத தண்ணீர் தேங்கும் குடி தண்ணீர் அற்ற அந்த இடத்தை வாங்கினார். அதாவது பளையில் பண்ணை போடும் அவரின் எண்ணம் நிறைவேறி விட்டது. அவ்வளவுதான்.அவர் உறவினர் கொழும்பில் இருந்துதான் பண்ணையை பார்கிறார்.சில மாதங்களுக்கு ஒரு முறைதான் வருவார். அவர் அங்கே,வேலையாட்கள் இங்கே தங்கள் விருப்பத்துக்கு பண்ணையை நடத்த,அது அந்த புலம்பெயர் தமிழரின் பணத்தை அழித்திருந்தது.

அடுத்தது வவுனியா குருக்கரூரில் பல கோடி முதலீட்டில் யானைக் காட்டின் நடுவே கட்டப்பட்ட மாட்டுப்பண்ணை.அங்கு கோடையில் தண்ணீர் கிடைக்காது. இருநூறுக்கும் மேற்பட்ட ஜெர்சி இன மாடுகளை யாழ்ப்பாணத்திலிருந்து சட்ட விரோதமாக கொண்டு வந்து வளர்க்க தொடங்கினார் ஒரு புலம் பெயர் தமிழர். அங்கு புல் நட முடியாது. அந்தளவு வறண்ட நிலம்.புல்லை வழங்க முடியாது வெறும் அடர்வு தீவனத்தை மட்டும் வழங்கி அந்த மாடுகள் சினை பிடிக்காது போயின. இளம் விலங்குகள் விரைவாக இறந்தன. உரிமையாளர் சில நாட்களில் மாட்டுப் பண்ணைக்கு அருகில் பிரம்மாண்டமான கோழிப்பண்ணை போட்டார்.அந்த கோழிகளுக்கு உணவு வழங்கத் தீவனக்கடை போட்டார்.சிறிது காலத்தில் அவை எல்லாம் மூடப்பட்டு வெறும் கட்டடங்களாக இன்று காட்சி தருகின்றன.

வெளிநாட்டு உரிமையாளர்களால் பண்ணையை நேரடியாக அவதானிக்க முடியாது.உறவினர்களை முகாமை செய்ய விட அவர்கள் முடிந்த வரை பணத்தை சுருட்டுவதிலேயே குறியாக இருந்தனர். கால்நடை வைத்தியரின் ஆலோசனையை அவர்கள் ஏற்று செய்வதாய் இருக்க வில்லை. குறைந்த பட்சம் மாடுகளுக்கு தேவையான பசும் புற்களை பயிரிடக்கூட அவர்கள் தயாராக இருக்கவில்லை. பணத் துக்கு சைலேஜ் வாங்கியிருந்தனர். தரமற்ற புற்களை ஊர் மாடுகளுடன் மேய விட்டனர்.இந்த வகை பண்ணையில் முகாமை செய்த உறவினர்கள் பயனடைந்தனர். விலங்குணவு கடைக்காரர்கள் பயனடைந்தனர். மாட்டு வியாபாரிகள் பயன டைந்தனர். யாழில் பண்ணையாளரின் கைத்தீனில் வளர்ந்த ஜேர்சி மாடுகளை இங்கு தண்ணீரும் புல்லும் இல்லாத இடத்துக்கு கொண்டு வந்து மெலிய வைத்து அதிக வெப்ப அயர்ச்சிக்கு உட்படுத்தி கொலை செய்தனர். கால்நடை வைத் தியர்களின் அவதானிப்பில் திருத்தங்கள் செய்ய இங்குள்ள வேலையாட்கள் தயாராக இருக்கவில்லை .தமக்கு வேலை கூடிவிடும் என்பதால் வைத்தியரை அடிக்கடி மாற்றுவார்கள். சில வேளைகளில் வைத்தியர் போன்று நடிக்கும் சட்டவிரோத நபர்களை நாடுவார்கள். [illegible] தற்போது பல இந்த மாதிரி பேர்வழிகளை காண முடிகிறது. பேஸ்புக்,வட்ஸ்அப்,வைபர் என குழுக்களை தொடங்கி பல பண்ணை ஆலோசனைகளை வழங்கும் இந்த நபர்கள் மேற்படி வெளிநாட்டு முதலீட்டாளர்களை பிடித்து விடுகிறார்கள். மாடு ஆடுகளை வாங்கி கொடுப்பார்கள். சிகிச்சை செய்வது போன்ற படங்களை தமது சமூக ஊடக குழுக்களில் பதிந்து ஒருவித விம்பத்தை ஏற்படுத்துகின்றனர்.சிலர் பண்ணைக் கடைகளையும் நடத்துகின்றனர்.தம்மை வைத்தியர் போல பாவனை செய்து முகாமைத்துவ பிரச்சனைகளை தீர்த்து வைக்கிறேன் என்று சொல்லி களத்தில் குதித்து அவர்களிடம் சுருட்டக் கூடியவற்றை சுருட்டுகின்றனர். எல்லாம் முடியத்தான் முறையான கால்நடை வைத்தியர்களிடம் வந்து சிகிச்சையளிக்க வேண்டும் என முரண்படுகின்றனர். சில வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அந்தந்த நாடுகளில் உள்ள கணக்கில் வராத கறுப்பு பணத்தையும் நலன்புரி பணத்தையும் முதலிடுவதால் இங்கு அந்த பணம் ஏமாற்றப் படும் போது திருடனுக்கு தேள் கொட்டிய நிலைதான் ஏற்படுகிறது.

உரிமையாளர் நேரடியாக சம்மந்தப்படும் பண்ணைகளே ஓரளவுக்கு தப்பிப் பிழைக்கின்றன.ஏனையவர்கள் தமக்கு எவ்வளவுக்கு வருமானம் கிடைக்கும் என்பதில் தான் குறியாக இருப்பார்கள். நான் அவதானித்த மட்டில் பொருத்தமற்ற கால்நடைகளை பொருத்தமற்ற இடத்துக்கு அதிக அளவில். கொண்டு வருகின்றனர். ஆனால் அவற்றை பராமரிக்க வேலையாட்களை குறைத்து அதில். மிச்சம் பிடிக்க நினைக்கிறார்கள். வைத்திய செலவையும் குறைக்க எண்ணி தேவை ஏற்படும் போதும் வைத்தியரை அழைப்பதில்லை அல்லது வைத்தியரல்லாத நபர்களிடம் செல்கிறார்கள் அல்லது சுய மருத்துவம் செய்கிறார்கள்.சில மருந்துக் கம்பனிகள் தமது விற்பனை வருமான இலக்குக்காக தாமே நேரடியாக மருந்துகளை விநியோகிக்கின்றன.

இந்த தொழிலில் நிரந்தர முதலீடுகளான கொட்டகை கால்நடைகளுக்கான செலவுகள் அதிகம். வருமானம் சிறுக சிறுகதான் வரும்.உதாரணமாக வயதான மாடுகளை வாங்கினால் அவை இலகுவில் சினை பிடிக்காது. விரைவில் கல்சிய குறைபாடு மற்றும் கீட் டோசிஸ் நிலை ஏற்பட்டு செலவுகள் கூடும். மிகவும் இளம் மாடுகள் எனின் அவை கருவுறும் வயதை அடைந்து சினைப்பட்டு கன்று ஈன வருடக் கணக்கில் ஆகலாம்.ஆனால் மாடுகளுக்குரிய தீவன ஏனைய செலவுகள் போய்க் கொண்டு தான் இருக்கும். செலவு போகிறது என்பதற்காக நோயுற்ற மாடுகளை அப்படியே விட முடியாது.இந்த தொழிலில் நீண்ட பொறுமை வேண்டும்.ஏனைய தொழில்களை போல் ஓரிரு நாளில் சில விடயங்களை சரிப்படுத்த முடியாது.இந்த மாதிரியான ஆபத்துகளை தெரிந்துதான் களத்தில் இறங்க வேண்டும்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 877





வேளக்காரப் படையினர் முன்னால் சென்றார்கள். பழுவூர் வீரர்கள் காலாந்தககண்டரைச் சூழ்ந்து கொண்டு நடந்ததைத் தெரிவித்தார்கள். பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானும் வீதி ஓரத்தில் ஒதுங்கினார்கள். சுற்று முற்றும் கூர்ந்து கவனித்தார்கள் மந்தாகினியைக் காணவில்லை.

"ஐயோ! இது என்ன? இப்படி நேர்ந்துவிட்டதே! தலைநகரில் அரசாட்சி அழகாக நடக்கிறது! அத்தையை எப்படிக் கண்டுபிடிப்பது? ஏதாவது கெடுதல் நேர்ந்திருக்குமோ? யாரேனும் பிடித்துக் கொண்டு போயிருப்பார்களோ?" என்று பூங்குழலி கவலைப்பட்டாள்.

காலாந்தககண்டரும் பழுவூர் வீரர்களும் போன பிறகு நாலாபுறமும் தேடிப் பார்த்தார்கள் மந்தாகினியைக் காணவில்லை.

திருமலை, "நான் இன்னும் சிறிது நேரம் தேடிப் பார்க்கிறேன். நீ சீக்கிரம் சென்று முதன்மந்திரியிடமும் இளைய பிராட்டியிடமும் சொல்லு நாம் இரண்டு பேர் மட்டும் தேடினால் போதாது. முதன் மந்திரியும் இளைய பிராட்டியும் ஏதேனும் ஏற்பாடு செய்வார்கள்" என்றான்.

பூங்குழலி போவதற்குத் தயங்கினாள். மறுபடியும் ஆழ்வார்க்கடியான், "நான் சொல்வதைக் கேள் உன் அத்தைக்கு ஒன்றும் நேர்ந்திருக்க முடியாது. ஜனக் கூட்டத்தில் யாரோ தெரிந்த மனிதன் ஒருவனை உன் அத்தை பார்த்திருக்கிறாள். அவள் ஒரு திக்கையே கவனமாக நோக்கியதிலிருந்து ஊகிக்கிறேன். அதனாலே தான் கூட்டத்தோடு சேர்ந்து வந்தாள். இப்போதும் அவனைத் தொடர்ந்துதான் போயிருக்கிறாள் என்று தோன்றுகிறது. எப்படியும் கண்டு பிடித்து விடலாம் நீ போய் முதன் மந்திரியிடம் சொல்லு!" என்றான். பூங்குழலி முதன் மந்திரியின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தாள்"

இதையெல்லாம் கேட்ட குந்தவை பெரிதும் கவலை அடைந்தாள். அநிருத்தர் அவ்வளவு கவலை கொண்டதாகத் தெரியவில்லை.

"பார்த்தீர்களா, இளவரசி! கலகப் பிசாசு எப்போது சந்தர்ப்பம் கிட்டும் என்று காத்துக் கொண்டிருப்பதை அறிந்து கொண்டீர்களா? அருள் மொழிவர்மர் உயிரோடிருக்கிறார் என்று தெரியவேண்டியதுதான். ராஜ்யமெங்கும் தீ மூண்டுவிடும்!" என்றார்.

"தாங்கள் முதன்மந்திரியாயிருக்கும் வரையில் அப்படி ஒன்றும் நேராது. இப்போது, என் பெரியன்னையைப் பற்றிச் சொல்லுங்கள். நான் பயந்தது போலவே ஆகி விடும் போலிருக்கிறதே! அவரை எப்படிக் கண்டுபிடிப்பது?" என்று கேட்டாள்.

"அந்தக் கவலை தங்களுக்கு வேண்டாம் கோட்டைக்குள் வந்து விட்டபடியால் இனி நான் அறியாமல் வெளியில் போக முடியாது. அதற்குத் தக்க ஏற்பாடு செய்து விடுகிறேன். தேடவும் ஏற்பாடு செய் கிறேன் . இனி, சக்கரவர்த்தி யைப் பார்க்காமல் மந்தாகினி தேவி இவ்விடம் விட்டுப் போகவும் மாட்டாள்!" என்றார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஏமாற்றிப் பிழைக்க நினைத்த நரி



ஒரு அடர்ந்த காடு ஒன்று இருந்தது. அந்த காட்டுக்குள், கரடி ஒன்று குடும்பத்துடன் வாழ்ந்து வந்தது, தாய்க் கரடி தினமும் குட்டிகளை விட்டு விட்டு உணவுக்காக வெளியே அலைந்து திரிந்து, மீன், தேனடை, பழங்கள் போன்ற வகைகளை, குட்டிகளுக்கு கொண்டு வந்து கொடுத்து தானும் உண்டு, மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது.

தாய்க்கரடி இவ்வாறு தினமும் வெளியே சென்று நிறைய தின்பண்டங்களை கொண்டு வருவதை அங்கிருந்த நரி ஒன்று பார்த்து வந்தது. அந்த நரிக்கு உழைத்து சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் இல்லை. எப்படியாகிலும் கரடி கொண்டு வருபவைகளை கவர்ந்து கொள்ள வேண்டும் அதற்கு என்ன வழி என யோசித்து, குட்டிகளை பயமுறுத்த நினைத்தது.

அதற்கு வைத்துக் கொண்டால், எளிதில் கரடி கொண்டு வருபவைகளை கவர்ந்து கொள்ளலாம் என முடிவு செய்தது, ஒரு நாள் தாய்க்கரடி வெளியே சென்றிருந்த போது கரடிக்குட்டிகள் தங்கியிருந்த குகைக்கு வெளியே வந்து நண்பர்களே! என அழைத்தது.

சத்தம் கேட்டு எட்டிப்பார்த்த கரடிக்குட்டிகள் வெளியே நரி ஒன்று நிற்பதை பார்த்தது. அவைகள் இதுவரை நரியை பார்த்ததில்லை, ஆகவே ஆச்சர்யமுடன் அதனை உற்றுப்பார்த்து நீ யார்? என்று கேட் டது.

நரி நான்தான் இந்த காட்டுக்கு மந்திரி, இங்கு உள்ள அனைவரும் எனக்கு கட்டுப்பட்டவர்கள் என்றது. கரடிக்குட்டிகள் ஆச்சரியத்துடன் எங்கள் அம்மா இதுவரை உன்னைப்பற்றி சொன்னதில்லையே என்றன. உங்கள் அம்மா அதை சொல்ல மறந்திருக்கலாம். நீங்கள் இனிமேல் உங்களிடம் எது வைத்திருந்தாலும் அதை என்னிடம் கொடுத்து விட வேண்டும், அப்படி கொடுக்க மறுத்தால் உங்களை இப்படியே என் ஆட்களை வரச் சொல்லி தூக்கிக் கொண்டு போய்விடுவேன் என பயமுறுத்தியது.

கரடிக்குட்டிகள் பயந்துவிட்டன. இப்பொழுது எங்களிடம் ஒன்றுமில்லை, சாயங்காலம் வா, எங்கள் அம்மா எங்களுக்கு சாப்பிட கொண்டு வருவார்கள் அதை உனக்கு தருகிறோம் என்றது. சரி நாளைக்காலையில் இதே நேரத்துக்கு வருகிறேன். நீங்களிருவரும் உங்கள் அம்மா கொண்டு வந்து கொடுப்பவைகளை எனக்கு எடுத்து வைத்து கொடுத்து விட வேண்டும்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமாற்றமே நாம் உலகிற்கு அளிக்கக் கூடிய உயர்ந்த பரிசு. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வருமுன்னர் காப்பதும் வந்ததை சீர்செய்வதும்

போதைவஸ்துக்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கின்ற நிலையங்களை வட மாகாணத்தில் அமைப்பது என ஏலவே எடுக்கப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கான பூர்வாங்கப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் இது தொடர்பான ஆராய்வுகள் நடந்துள்ளன.

உண்மையில் வட மாகாணத்தில் போதைக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு நிலையங்கள் தேவையாகவுள்ளன என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

அதிலும் மாவட்டம் தோறும் புனர்வாழ்வு நிலையங்கள் அமையும்போது பாதிக்கப்பட்டவருக்கான புனர்வாழ்வு சுலபமானதாக இருப்பதுடன் பெற்றோர்களும் தம் பிள்ளைகளைப் பார்வையிடுவதற்கு வாய்ப்பாக அமையும்.

அதேநேரம் போதைக்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வு நிலையங்களை அமைத்து விடுவதோடு எங்கள் கடமை முடிந்து விடுகிறதா என்றால் அதுதான் இல்லை.

இங்குதான் ஒரு முக்கியமான விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது போதைப் பயன்பாட்டை அடியோடு நிறுத்துவதுதான் அந்த முக்கிய விடயமாகும்.

ஆம், போதைவஸ்து பாவனை என்பது நம் மண்ணில் சர்வசாதாரணமாக நடந்தாகிறது. ஏதோவொரு வகையில் போதை வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தை விஸ்தரித்துக் கொண்டே இருக்கின்றனர்.

அதிலும் மாணவர்களை நோக்கிய அவர்களின் போதைவஸ்து வியாபாரம் எங்கள் எதிர்காலச் சந்ததியை சிதைக்கின்ற செயலாகும்.

ஆகவே போதைக்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதுடன் போதைவஸ்துப் பாவனையை இல்லாது செய்வதன் பொருட்டு வருமுன்னர் காக்கின்ற கருமங்களை முன்னெடுப்பது மிகவும் கட்டாயமானது.

ஆம், புனர்வாழ்வு நிலையங்களின் பணிகள் ஒரு குறிப்பிட்ட கால எல்லையுடன் நின்று போக வேண்டும்.

போதையால் பாதிக்கப்பட்டவர்கள் எவரும் இல்லை எனும் நிலைமை ஏற்படும்போது அது சாத்தியமாகும்.

இது சாத்தியமாக வேண்டுமாயின், போதைப் பொருளை நம் மண்ணில் இருந்து முற்றற ஒழிக்க வேண்டும்.

ஆம், எங்கள் இளைஞர்களும் மாணவர்களும் மனம் வைத்தால், போதைப்பொருள் வியாபாரத்தை அதிரடியாக ஒழிக்க முடியும்.

எனவே போதையை ஒழிக்கின்ற வேலைத் திட்டமும் போதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வும் சமாந்தரமாக முன்னெடுத்துச் செல்வது அவசியம்.

அப்போதுதான் போதையற்ற தேசம் என்ற இலக்கு சாத்தியமாகும்.

# பிள்ளையான் அறிந்தே ஈஸ்டர் படுகொலை அரங்கேறியமை விசாரணையில் அம்பலம்

## அதிர்ச்சித் தகவலை வெளியிட்ட அமைச்சர் விஜேபால

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உயிர்த்த ஞாயிறு படுகொலை தொடர்பில் முன்கூட்டியே அறிந்து வைத்திருந்தமை விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இப்படுகொலையில் அவருக்கு நேரடித் தொடர்புள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி, ஈஸ்டர் ஞாயிறுத் தாக்கு தல் குறித்து முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் விளக்கமறியலில் வைக்கப்படுள்ள பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டுவரும் விசாரணைகளின் வாயிலாக அவர் ஈஸ்டர் தாக்குதலை முன்கூட்டியே அறிந்து வைத்திருந்தமை தாக்குதலில் நேரடியாக ஈடுபட்ட தகவல்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் தாக்குதல் தொடர்பான ஆரம்ப விசாரணைகளில் காணப்படும் குறைபாடுகள், அலட்சியம் குறித்தும் தற்போது முறையான விசாரணை நடைபெறுகின்றது எனத் தெரிவித்தார். (ம-7)

## நடுவீதியில் பழுதாகும் பழைய பேருந்தால் வடமராட்சி கிழக்கு மக்கள் நிர்க்கதி

வடமராட்சி கிழக்கிலிருந்து பருத்தித்துறைக்கு சேவையில் ஈடுபடும் இ.போ.ச பருத்தித்துறை சாலையின் பேருந்து மிக நீண்டகாலப் பாவனையில் உள்ளமையால் அடிக்கடி பழுதடைந்து இடை நடுவே நிற்பதால் வடமராட்சி கிழக்கில் இருந்து பருத்தித்துறையிலுள்ள பிரபல பாடசாலைகளிற்கு வரும் மாணவர்கள், உத்தியோகஸ்த்தர்கள், நோயாளிகள் மற்றும் விவசாயிகள் எனப்பலரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் .

நேற்று (03) வெள்ளிக்கிழமை மாத்திரம் காலை, மாலை என இருவேளையும் குறித்த பஸ் வண்டி இடைநடுவே பழுதடைந்துள்ளது. காலை கோவிலில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த பஸ் வண்டி மருதங்கேணிப் பகுதியில் பழுதடைந்தமையால் மாணவர்கள் பலரும் அவதியுற்றனர்.

மாலையிலும் பருத்தித் துறையிலிருந்து சென்ற பஸ் வண்டி நாகர் கோவிலில் பழுதடைந்துள்ளது.

இவ்வாறு இ.போ. சபையின் பருத்தித்துறை சாலையின் வடமராட்சி கிழக்கிற்கான சேவையில் ஈடுபடும் பழைய பஸ் வண்டியினால் சேவைகள் அடிக்கடி தடைப்படுவதால் பருவகால சீட்டினை கொள்வனவு செய்தவர்களும் கடும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

எனவே இப்பேருந்தை மாற்றி புதிய பேருந்தை சேவையில் ஈடுபடுத்துமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7,60)

## விடுதி மாடியிலிருந்து குதித்த மாணவி படுகாயம்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பெண்கள் பாடசாலை விடுதியின் இரண்டாம் மாடியில் இருந்து குதித்த மாணவியொருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் முல்லைத்தீவை சேர்ந்த பதின்நான்கு வயதுடைய மாணவியே விபரீத முடிவெடுத்த நிலையில் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

வைத்தியசாலையில் மாணவியிடம் சுன்னாகப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது விளையாட்டு ஒன்றில் முதலிடம் பெற்றதைத் தொடர்ந்து சக மாணவிகள் தன்னைப் புறக்கணித்ததாகவும் அதனால் ஏற்பட்ட மன வுளைச்சல் காரணமாகவே தான் விபரீத முடிவெடுத்ததாகவும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார்மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,104)

## பொலிஸ் ரீசேர்ட் சகிதம்
## கஞ்சிபானி இம்ரானின் துப்பாக்கி ரவைகள் மீட்பு

தலைமன்னார் பகுதியில் பொலிஸாரின் ரீசேர்ட் ஒன்றுடன் KPI எனப் பெயர் எழுதப்பட்ட துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் தலைமன்னார் கட்டுக்காரன் குடியிருப்பு பகுதியில் பொலிஸ் ரீசேர்ட் ஒன்றுடன் ரி - 56 ரகத் துப்பாக்கி ரவைகள் 67ஐ பொலிஸார் மீட்டுள்ளனர்.

அவற்றில் 37 துப்பாக்கி ரவைகளில் KPI என எழுதப்பட்டுள்ளது.

KPI என்பது பிரபல பாதாள உலகக் குழுவின் தலைவரான கஞ்சிபானி இம்ரான் என்பதனைக் குறிப்பதாகவும் பொலிஸாரின் பிரத்தியேக ரீசேட் சகிதம் அவை மீட்கப்பட்டுள்ளமை மிகவும் பாரதூரமானது எனவும் தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## மூளாயில் கலைவிழா

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் 2025ம் ஆண்டுக்கான கலை விழாவானது நாளை (05) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மூளாய் பிரசாத் அரங்கில் மன்றத் தலைவர் சி.மயூரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் வேலாயுதம் சிவராஜா பிரதம விருந்தினராகவும் இயக்கச்சி நீச்சா ஒருங்கிணைந்த பண்ணையின் ஸ்தாபகர் கந்தையா பாஸ்கரன் சிறப்பு விருந்தினராகவும் பிரபல தொழிலதிபர் E.S.P.நாகரத்தினம், மன்ற முன்னாள் உறுப்பினர் பன்னீர்செல்வம் தவனேசன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் வில்லிசை, நடனம், விசேட நாடகங்கள், சிறப்புப் பட்டிமன்றம் உட்பட பல கலை இரசனைமிகு நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன. (ம-7)

## கலைஞனின் குரல் மாதாந்த வெளியீடு

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தினால் கலைஞனின் குரல் மாதாந்தப் பத்திரிகையின் இதழ் -03 இன் வெளியீட்டு விழாவானது இன்று (04) சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் எல்மோ இல்லம், 2ம் குறுக்குத் தெரு, பாஷையூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள மன்றத்தின் பிராந்திய செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவர் இரா.மதிகரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் இதழின் வெளியீட்டுரையை செல்வி செல்வராஜா மயூரிகா அவர்கள் வழங்கவுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
# ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி
## பகுதி VI

15

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

தங்கள் நலவுரிமைகளைப் பாதுகாத்தற்கும் அவற்றை விருத்தியாக்குவதற்கும் வேண்டிய சட்டங்களைச் சட்டவாக்கச்சபை மூலம் நிறைவேற்றுவிக்க வேண்டும். அதற்கு அச்சபையிலே தமக்குக் கூடிய பங்கு வேண்டும் என இவ்விரு சமூகத்தினரும் விழைந்தனர்.

சட்டவாக்கச் சபையிலே அங்கம் வகிக்க வேண்டிய பிரதிநிதிகளைத் தாமே தெரிந்து கொள்ளும் வன்மையுடையவர்களாயும் அவர்கள் இருந்தனர். எனவே தம்பொருட்டு அங்கத்தவர்களைத் தேசாதிபதியே நியமிக்கும் முறையை அவர்கள் வெறுத்தனர். தேசாதிபதி நியமிக்கும் அங்கத்தவர்கள் அவருடைய கைப்பிள்ளைகளாக இருந்து அவர் சொற்படி நடப்பரேயன்றி, தாம் எச்சமூகத்தின் பொருட்டு நியமிக்கப்பட்டனரோ அச்சமூகத்தின் நன்மையைப் பரிபூரணமாகக் கவனிக்க மாட்டார்கள் என்று ஆங்கிலேயரும் பறங்கியரும் கருதினர்.

எனவே தம் பிரதிநிதிகளைத் தாமே தெரியவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினர். அது மாத்திரமல்ல: இங்கிலாந்தின் லிபரல் சம்பிரதாயப்படி சட்டவாக்கச்சபையிலே உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தவர்களே பெரும்பான்மையினராக இருக்க வேண்டும் என்றும் கோரினர்.

இக்கோரிக்கைக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் இணங்கினால் அரசாங்க வரவு செலவைத் தயாரிப்பது தங்கள் அதிகாரத்தில் வரும் என்றும் அதன் பயனாக ரோட்டுக்கள் நிர்மாணிப்பதற்கும் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வதற்கும் கூடிய பணத்தை ஒதுக்கச் செய்யலாம் என்றும் அவர்கள் எண்ணினர். இது சம்பந்தமாக கிளர்ச்சிகளும் நடைபெற்றன.

### 1855ஆம் ஆண்டில் இலங்கை வர்த்தகர் சங்கமும் தோட்டத் துரைமார் சங்கமும் தமக்குரிய பிரதிநிதிகளைத் தாமே தனித்தனியாக தெரிந்துகொள்ள அனுமதி

இப்படிப் பலவிதமாகச் சிறுபான்மையினரான ஆங்கிலேயரும் பறங்கியரும் கிளர்ச்சி செய்தும் அரசியற் சீர்திருத்தம் விடயமாக அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை ஆனால் 1855 ஆம் ஆண்டில் இலங்கை வர்த்தகர் சங்கமும் தோட்டத் துரைமார் சங்கமும் தமக்குரிய பிரதிநிதிகளைத் தாமே தனித்தனி தெரிந்துகொள்ளலாம் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் அனுமதித்தது.

இவ்விரு சங்கங்களும் மூன்று அங்கத்தவர்களைச் சட்டவாக்கச்சபைக்குத் தெரிய அனுமதியளிக்கப்பட்டது. எனவே பிரதிநிதிகளைத் தெரிவு செய்துகொள்ளல் என்ற கொள்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் முதன்முதலாக 1855 ஆம் ஆண்டில் அங்கீகரித்தது.

அப்படிச் செய்தபோதிலும், சட்டவாக்கச் சபையிலே உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தவர்களே பெரும்பான்மையினராக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் காலந்தோறும் நிராகரித்தது.

### உத்தியோகப்பற்றில்லாத அங்கத்தவர்களுக்கு ஓர் விசேட சலுகை

1860ஆம் ஆண்டில், உத்தியோகப்பற்றில்லாத அங்கத்தவர்களுக்கு ஓர் விசேட சலுகை வழங்கப்பட்டது. அதாவது பண மசோதா ஒன்றை விட வேறேதும் மசோதாவையும் அவர்கள் சட்டவாக்கச்சபையில் கொண்டுவரலாம் என்று அனுமதிக்கப்பட்டனர்.

இதுவரை அரசாங்கமே மசோதாக்களை எடுத்தாளும் கருமத்தைச் செய்துவந்தது. இந்தச் சலுகையை வழங்கியமை, தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளும் நியமனப் பிரதிநிதிகளும் சட்டங்கள் மசோதாக்கள் ஆக்கும் கருமத்தில் ஈடுபடுவதற்கு வழி திறந்தது எனலாம்.

1864 ஆம் ஆண்டில் செலவுக்கு மிஞ்சிய வருமானமாக இலங்கை அரசாங்கத்துக்கு 100, 000 பவுண் கிடைத்தது. இதுவரை பிரிட்டிஷ் அரசாங்கமே இலங்கையில் இருந்த இராணுவத்துக்கான செலவை ஏற்றுவந்தது. ஆனால் இனி அந்தச் செலவை இலங்கையே ஏற்று நடத்த வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பி யது. ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் விருப்பத்துக்குச் சட்டவாக்கச்சபையில் இருந்த ஐரோப்பியர் மாறாக இருந்தனர்.

ஆகவே இராணுவத்துக்கான செலவை உத்தியோக அங்கத்தவர்களின் வாக்குச் சம்மதத்தைக் கொண்டே தேசாதிபதி நிறைவேற்ற வேண்டியிருந்தது. அப்படி அவர் செய்யவே நியமன அங்கத்தவர்களாயிருந்த லோறன்ஸ், ஜோர்ஜ் வால், தொம்ஸன், காப்பர், ஜேம்ஸ் அல்விஸ், ஈற்றன் (விடுமுறையைக் கழிப்பதற்காக இங்கிலாந்து சென்ற முத்துக்குமார சாமிக்காக நியமனம் பெற்றவர் ஈற்றன் ஆவர்) என்பவர்கள் தம்பதவிகளை விட்டு விலகினர்.

இவர்கள் தங்கள் விலகல் கடிதங்களை தேசாதிபதிக்கு அனுப்பிவைத்த போது அவர், தான் பிரித்தானிய மகாராணியாரின் பேரிலேயே அவர்களை நியமனஞ் செய்ததெனவும் அங்கடிதங்கள் மகாராணியாராலேயே ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டுமெனவும் கூறினார். விலகல் செய்த அங்கத்தவர்கள் தங்களுக்கேற்பட்ட அவமானத்தையும் அநீதியையும் ஆட்சேபித்து தேசாதிபதிக்கும் குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கும் நினைவேடுகளை அனுப்பிவைத்தனர். இதன் பேறாக குடியேற்ற நாட்டரசுச் செயலாளர், இலங்கை தேசாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களின் விலகல் கடிகங்களை ஏற்றுக்கொள்ளுமாறு பணித்தார்.

அதுவுமன்றி இலங்கை விவகாரங்களை விசாரணை செய்து அறிக்கை சமர்ம்பிக்கும்படி ஒன்பது பேர் அடங்கிய ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது இதன் விளைவே இலங்கைப் படைச் செலவை நிர்ணயிக்கும் அதிகாரத்தை குடியேற்ற அலுவலகம் 1867 ஆம் ஆண்டு கைவிட்டமை ஆகும். அதாவது இலங்கையின் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாட்டை பிரிட்டிஷ் அரசாங்கம் 1867 ஆம் ஆ்ண்டில் தன் பொறுப்பில் இருந்தும் நீக்கி இலங்கை அரசாங்கத்துக்கே ஒப்படைத்தது.

### இலங்கைக் கூட்டவை நிறுவுதல்

சட்டவாக்கச்சபையிலிருந்து விலகல் செய்த உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் 1864 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி இலங்கைக் கூட்டவை என்ற ஒரு சபையை நிறுவினர், இதில் இன, மத, மொழி வேறுபாடின்றி பல துறைப் பிரமுகர்கள் அங் கத்தவர்களாகச் சேர்ந்தனர். உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களோடு சாள்ஸ் அம்புறோஸ், பெர்குசன், மிற்சல், மாச்வுட், ஆமிச்ரேச், கிறீன், சாள்ஸ் பைட், நன்னித்தம்பி முதலியார், டி சேரம், சாள்ஸ் எட்கார் கொறியா, பிலிப் ஜயவர்த்தனா, தர்மரத்தினா ஆகியோர் தோளோடு தோள் நின்று உழைத்தனர். அக்கலகம் தலையங்கங்கள் தீட்டி இலங்கைக் கூட்டவையை மேலும் உற்சாகப்படுத்திற்று. இதன் கிளைகள் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டன.

இலங்கைக் கூட்டவையின் கோரிக்கைகளைச் செவிசாய்க்க குடியேற்ற நாட்டரசுச் செயலாளர் ஒரு அரசியல் ஆணைக்குழுவை நியமனஞ் செய்ய விருப்பங் கொண்டார்: ஆனால் அதற்கு அக்காலத்து தேசாதிபுதி ஹேறார்குலிஸ் றொபின்சன் முட்டுக்கட்டையாகவிருந்தார், தேசாதிபதியின் மட்டற்ற அதிகாரம், சட்டவாக்கச்சபை அங்கத்தவர்கள் ஆயுட்காலம்வரை நியமனம் பெற்றமை, அதில் மூன்று இலங்கையர் மட்டுமே அங்கத்துவம் வகித்தமை ஆகியன காலத்துக்குக் காலம் இச்கூட்டவையின் கண்டனத்துக்குள்ளாயின.

1866 ஆம் ஆண்டு நாட்டில் உணவுத்தட்டுப்பாடு ஏற்படவே மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை விநியோகஞ் செய்வது அரசாங்கத்தின் கடமையென இலங்கைக் கூட்டவை எடுத்துரைத்தது. அவ்வாண்டு ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி சட்டவாக்கச்சபையில் உரைநிகழ்த்திய தேசாதிபதி றொபின்சன், இலங்கையர் அலட்சியமுடையவர்களாகவும், சோம்பேறிகளாகவும் இருப்பதால் அவர்களுக்கு உணவு விநி யோகம் செய்யும் கடமைப்பாடு அரசாங்கத்துக்கு இல்லையெனக் கூறினார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயக்கச்சியில்...

கிளிநொச்சி - இயக்கச்சியில் உள்ள தனியார் காணியில் வெடிக்காத நிலையில் குண்டுகள் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இயக்கச்சிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் தன்னுடைய காணியில் துப்புரவுப் பணியை மேற்கொண்டிருந்த நிலையில் குறித்த காணிக்குள் குண்டுகள் காணப்படுவதை அவதானித்தார்.

சம்பவம் குறித்து உடனடியாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப் பட்டபோது, சம்பவ இடத்திற்கு உடனடியாக மருதங்கேணிப் பொலிஸார் விரைந்து சென்று குறித்த பகுதியில் பாதுகாப்பினைப் பலப்படுத்தினர்.

இன்றையதினம் நீதிமன்ற அனுமதியின் பின் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,104)

## புலனாய்வுத்...

நிகழ்வுக்காக கடலூரான் சுமனின் வரிகளில் கிப் ஹொப் சங்கீத்தனனின் இசையமைப்பில் பாடகர் கானா குமரனால் பாடப்பட்ட "குருதிக்காடு" எனும் படைப்பானது போராளிகள் நலன்புரிச் சங்கத்தினரால் கடந்த மே மாதம் வவுனியாவில் வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே குறித்த பாடலைப் பாடிய கானா குமரனைப் புலனாய்வுத் துறையினர் நேற்று விசாரித்துள்ளனர்.

குருதிக்காடு பாடலின் தயாரிப்பாளர் என்.ஆர்.கிரியேசன் திஷோபன் என்பது குறிப்பிடத்தக்கது (ம-7)

## மன்னாரில்...

நிலையத் தடுப்புக் காவலில் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் கபிலன் (வயது-34) என்பவரே உயிரிழந்தவராவார்.

பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (02.10.2025) மாலை போதைப்பொருள் தொடர்பாகச் சந்தேகத்தின் பெயரில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

பின்னர் குறித்த நபர் பொலிஸ் நிலையக் கூண்டில் தடுத்துவைக்கப்பட்ட நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை குறித்த சந்தேக நபர் இறந்த நிலையில் காணப்பட்டுள்ளார். பொலிஸாரே தன் மகனை அடித்துக் கொன்றதாக உயிரிழந்த நபரின் தாயார் குற்றஞ்சாட்டினார். (ம-7,285)

## இளைஞன் மீது...

முத்தையன்கட்டு விநாயகர்புரம் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனே வாள்வெட்டில் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-7)

## நாட்டை...

நிறுவப்பட்ட ஒரு அரசாங்கம் உள்ளது. அதேபோல், எமது நாட்டில் ஒரு பாதாள ஆட்சி உள்ளது. அது அவ்வளவு சக்திவாய்ந்ததாக இல்லை. ஆனால் ஆயுதங்களின் சக்தியின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட மேலோட்டமான அரசாங்கத்தின் அனைத்து அம்சங்களையும் கொண்டுள்ளது.

எனவே, சட்ட மற்றும் அரசியலமைப்பு ஆட்சியின் பாதுகாப்பிற்காக, இந்தப் பாதாள ஆட்சியை நாம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

நமது அரசாங்கம் அந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளது. அந்த நோக்கத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் இருந்து ஒருபோதும் பின்வாங்காது என்று உறுதியளிக்கிறேன்.

அண்மைய நாட்களில் நாம் பார்த்த செய்திகள், அந்தப் பாதாள ஆட்சியின் மூலம் நம் நாடு எவ்வளவு அழிவுகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது. போதைப்பொருள், ஆயுதங்கள், சட்டவிரோதச் சொத்துக்கள், சேகரித்த செல்வம், அதற்காக ஆயுதங்களைக் கையாளக்கூடிய ஒரு சமூகம், அந்த ஆயுதங்களைக் கொண்டு மக்களைச் சுட்டுக் கொல்லக்கூடிய மனநிலை கொண்ட இளைஞர்கள் என ஒரு சமூகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சமூகத்தை சீர்படுத்த, பாதாள ஆட்சி முடிவுக்கு வரவேண்டும். அதற்காக, ஒரு அரசாங்கமாக நாம் நமது பங்கை மிகவும் வலுவாக நிறைவேற்றுகிறோம்.

வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதோடு, அனைத்து வகையிலும் சரிவடைந்துள்ள சமூகத்தைச் சீர்படுத்தும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், போதைப் பொருள் கடத்தல் மற்றும் துப்பாக்கி வன்முறையால் சமூகத்தைப் பாரிய அழிவுக்கு இட்டுச் சென்ற பாதாள ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை ஒருபோதும் மாற்றியமைக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தினார். (ம-7)

## கலா...

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களை நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அநுர அரசாங்கம் மிக விரைவில் கொண்டுவரவுள்ள ஏக்கிய இராச்சிய (ஒற்றையாட்சி) அரசியல் யாப்பினுடைய ஆபத்துக்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் வளாகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் கலந்து கொண்டார். (ம-7,30,33)

## ரணில்...

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தனவின் அழைப்பின் பேரில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்த தங்கள் நிலைப்பாட்டை இந்தக் கூட்டத்தில் விளக்கியுள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சியின் தலைமையில் கொழும்பில் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்துவது குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

மேலும் எதிர்காலத்தில் எதிர்க்கட்சியாக இணைந்து எடுக்க வேண்டிய பல முக்கிய நடவடிக்கைகள் குறித்து கட்சித் தலைவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு முன்வைத்த திட்டங்களை அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.10.03
சீட்டிழுப்பு இலக்கம் 5971
N 3 8 3 8 4 0
அத சம்பத
N 3 8 4 0
சீட்டிழுப்பு இலக்கம் 546

சுப தவசக்
திகதி 2025.10.03
சீட்டிழுப்பு இலக்கம் 0887
விருச்சிகம் 03 22 32 45

தன நிதானய
திகதி - 2025.10.03
சீட்டிழுப்பு இலக்கம் - 2001
N 32 40 50 82 N

மெகா பவர்
திகதி 03/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2319
B 17 16 52 64 69

ஜய
திகதி 2025.10.03
சீட்டிழுப்பு இலக்கம் 0239
M 3 3 5 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4213
சீட்டிழுப்பு திகதி 03.10.2025
D 34 40 68 75
D

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.03
சீட்டிழுப்பு இலக்கம் 1280
மிதுனம் 30 42 60 62 மிதுனம்

சுப்பிர தன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
03.10.2025 வெற்றி வாரம் 0679
T 3 6 6 1 9 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,619,422.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2945
சீட்டிழுப்பு திகதி 2025.10.03 தினம் வெள்ளிக்கிழமை
10 33 49 56 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,515,336.00

சனிதா
திகதி 03.10.2025 வெற்றி வாரம் 5106
05 41 46 74 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,547,665.20

சசிரி
வெற்றி வாரம் 0783
சீட்டிழுப்பு திகதி 03.10.2025
வெள்ளிக்கிழமை
25 30 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4657
சீட்டிழுப்பு திகதி 03.10.2025 தினம் வெள்ளிக்கிழமை
13 40 42 46 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,577,622.00

லக்பிம
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 24 06 11 30 34
2121
03.10.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.597,877,108.80

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2771
சீட்டிழுப்பு திகதி : 2025.10.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,337,656.00
22 30 48 72 L


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## AL PHYSICS CLASS

அரச பரீட்சை புள்ளித் திட்டமிடல், மேலதிக பிரதம பரீட்சகர் அனுபவமுடைய ஆசிரியரால் தனிப்பட்ட, குழு வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. வீடு வந்தும் கற்பிக்கப்படும்.

தொடர்பு : 077 600 4896
Ranjit Sir B.Sc, P.G.D.E, S.L.P.S I
(5551)

## விற்பனைக்கு

புதிதாக வாங்கி சிறிது காலம் மட்டும் பாவித்த அரைக்கும் ஆலை இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு
12" கிறைண்டர்,நெல்லு குற்றும் இயந்திரம் ,
அரிசி தீட்டும் இயந்திரம்,கொப்பறா கட்டர்,எண்ணெய் ஊற்றும் இயந்திரம், 23" டிஸ் மில், மோட்டர்கள் அனைத்தும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு - 077 373 5261
(1616)

## சிறுநீரகம் தேவை

48 வயதுடைய நபர் ஒருவருக்கு B+, O+ குருதி வகையுடைய சிறுநீரகம் தேவை. சிறுநீரகம் தர விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
(HLA Report) உள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும்.

077 893 9807
077 792 5831
(5583)

## மகாவிஷ்ணு கட்டடப்பொருள் விற்பனை நிலையம்



தரமான பொருட்கள் மிகக் குறைந்த விலையில் நீங்கள் இருக்கும் இடத்திற்கு நாங்கள் கொண்டு வந்து தருவோம்.

- 1 ரக்டர் 5 நூல் சல்லி – 16,000/= ரூபா
- 1 ரக்டர் டஸ்ற் – 12,000/= ரூபா
- அத்திவாரக் கல் (6X9) – 15,000/= ரூபா

(இந்த விலையில் பறித்து விடப்படும்)
(5568)

ஏனைய கட்டடப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளலாம்.
பழைய கடை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இல.530, நாவலர் வீதி | 077 905 0185, 077 847 0341 | உரிமையாளர் : வ.ராசு

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் K.K.S வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.
(5527)

076 663 3199

## விற்பனைக்கு

No 72, மானிப்பாய் இணுவில் பிரதான வீதியில் சுதுமலை வடக்கு மானிப்பாயில் 6 பரப்பு வீடு சுற்றிவர மதிலுடன் விற்பனைக்குண்டு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
Sivasakthy Palan (Jeeva)
077 474 3499
(1617)

## உடன் விற்பனைக்கு

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக 10 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும்,
- யாழ். K.K.S வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்,
- யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் பலாலி வீதி முகப்புடன்6 பரப்புக் காணியும்,
- யாழ். கந்தர்மடச் சந்திக்கு அண்மையில் 3 பரப்பு மாடியுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு.

(C-4015)

தொடர்புகளுக்கு : 077 723 2535

## காணி விற்பனைக்கு

யாழ்.நல்லூர் குறொஸ் றோட்டில் 1 ¾ பரப்புக்களாகப் பிரிக்கப்பட்ட 4 காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

மேலதிக விபரமறிய காணி உரிமையாளரைத் தொடர்பு கொள்ள :

077 801 5156
077 607 8888
(C-4009)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது )
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com
(C-4018)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1966 . 06 . 18

இறப்பு 2021 . 09 . 18

### அமரர் சதாசிவம் வேல்மாறன்

எட்டுத்திக்கும் இசைமீட்ட கலைமகன்
நாட்டுக்காய் இசைத்தான்
நம்மவர்க்காய் இசைத்தான்
அந்தக் கூத்தனுக்கும் இசைத்தான்
இசையை விதைத்தான்
"நீங்கள் காற்றாய் இசையாய் எம்மோடு கலந்திருப்பீர்கள்"
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

82/4, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
076 334 0906

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
(1618)

## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 205/= Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 163/= |
| 5Kg பிறிமா கோதுமை மா | - 925/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 235/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 290/= |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 188/= |
| 1Kg அவல் | - 299/= |
| 1Kg கடலை | - 375/= |
| 1Kg சர்க்கரை | - 248/= |
| 1Kg கடலைப்பருப்பு | - 320/= |
| 100g கற்கண்டு | - 35/= |
| 100g கச்சான் முத்து | - 110/= |
| 1Kg உளுத்தம்பருப்பு | - 1099/= |
| 1Kg பயறு | - 790/= |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 239/= |

MAX 03 ~~1200~~ 1135 400g Anchor



~~320~~ 280 1Kg சவர்க்கார தூள்



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.
(1619)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி அமரா வீதியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.

- இருவழிப் பாதையுடன்
- A9 வீதியிலிருந்து 150m தூரம்
- அமரா வீதி முகப்புடன்
- ஒரு பரப்பின் விலை 10 இலட்சம்
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழிச் சந்தி - 400m தூரம்
- நாவற்குழி சிவன்கோவில் - 300m தூரம்
- நன்னீர் ஊற்று, நல்ல சூழல்

தொடர்புகளுக்கு :
076 860 2770, 076 987 8617
(5580)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org